## இரண்டாம் பகுதி

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கணக்குகள் | 129 |
| 2. | வெளிநாட்டுச் செலாவணி | 132 |
| 3. | உள்நாட்டு வங்கித்தொழில் | 133 |
| 4. | வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் திட்டம் | 134 |
| 5. | வங்கித்தொழில் அபிவிருத்தி | 134 |
| 6. | நாணய வழங்கல் | 135 |
| 7. | வங்கி மேற்பார்வை | 135 |
| 8. | அபிவிருத்தி நிதி | 135 |
| 9. | பொதுப்படுகடன் | 142 |
| 10. | செலாவணிக் கட்டுப்பாடு | 147 |
| 11. | ஊழியர் சேமநிதியம் | 149 |
| 12. | புள்ளிவிபரம் | 151 |
| 13. | பணியாளரகம் | 153 |
| 14. | பயிற்சி | 155 |
| 15. | ஆளணி | 155 |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகள்

1980 திசெம்பர் 31ஆம் நாளன்று உள்ளவாறு மத்தியவங்கியின் ஐந்தொகையும் 1980 திசெம்பர் 31ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கும் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளன.

1979 திசெம்பர் 31ஆம் நாளன்று இருந்த ரூ. 16,835,932,601 கொண்ட மத்தியவங்கியின் மொத்தச் சொத்துக்களுடன் ஒப்புநோக்குமிடத்து, 1980 திசெம்பர் 31ஆம் நாளன்று இருந்த மொத்தச் சொத்துக்கள் ரூ. 22,831,653,904 ஆகும். சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்குக் காரணம் யாதெனில் 1979 திசெம்பர் 31ஆம் நாளன்று ரூ. 4,517,107,299 ஆக இருந்த உள்நாட்டுச்சொத்துக்கள் 1980 திசெப்பர் 31ஆம் நாளன்று ரூ. 12,199,446,333 ஆக அதிகரித்தமையே ஆகும். வங்கியின் ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் ரூ. 4,358,595,506 இலிருந்து, ரூ. 6,227,920,667 ஆக அதிகரித்தது. இவ்வாறு ஏற்பட்ட அதிகரிப்புக்களின் ஒரு பகுதியினை இக்காலப்பகுதியில் வங்கியின் பன்னாட்டுச்சொத்துக்கள் ரூ. 7,960,229,796 இலிருந்து ரூ. 4,404,286,904 ஆகக் குறைவடைந்த வீழ்ச்சி, எதிரீடு செய்தது. இந்நிலைமையினை வங்கியால் வெளிநாட்டில் வைத்திருக்கப்பட்ட காசு நிலுவைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

மீளாய்விற்குரிய இக்காலப்பகுதியில் வங்கியின் நாணய வழங்கல் ரூ. 4,321,140,913 இலிருந்து ரூ. 5,009,516,039 ஆக அதிகரித்தமையாலும் வைப்புப் பொறுப்புக்கள் ரூ. 4,474,739,731 இலிருந்து ரூ. 5,342,535,514 ஆக அதிகரித்தமையாலும் "ஏனைய பொறுப்புக்கள் கணக்குகள்" ஆகியவற்றின் நிலுவைகள் ரூ 7,590,680,268 இலிருந்து ரூ. 11,336,040,572 ஆக அதிகரித்தமையாலும் வங்கியின் பொறுப்புக்களில் அதிகரிப்பு ஏற்படுவதற்கு காரணமாயிற்று.

1980 ஆம் ஆண்டுக்கான வங்கியின் வருவாயான ரூ. 2,602,098,160/05 சென்ற ஆண்டைக்காட்டிலும் ரூ 1,633,708,158 கொண்ட அதிகரிப்பொன்றைக் காட்டியது. செலவு, ஒதுக்கு நிதிகட்கான ஒதுக்குகள், தேய்மானத்திற்கான ஒதுக்குகள் என்பன ரூ. 2,601,098,160/05 ஆகும். தேறிய இலாபமான ரூ. 10 இலட்சம் மிகைக்கு மாற்றப்பட்டது.

1980 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் ரூ. 2500 இலட்சங்கொண்டதொரு தொகை வங்கியின் பொது ஒதுக்கிலிருந்து அதன் நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியத்திற்கு மாற்றப்பட்டது. இதன் காரணமாக நடுத்தர, நீண்ட காலக் கொடுகடன் நிறுவனங்கட்குக் கிடைக்கும் மூலவளங்கள் கணிசமாக அதிகரித்தன. மேலும் ரூ 83,750,000 தொகை மூலதன வழங்கல்கட்கு மாற்றப்பட்டது. இவ்வழங்குகை இலங்கை ஏற்றுமதிக்கொடுகடன் காப்புறுதிக்கூட்டுத்தாபனம், தேசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் மூலதனத்தைக் கூட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டது.

## 1980 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் நாளில்

### ஐந்தொகை — 1980 ஆம் ஆண்டு திசெம்பர்

| 1979 திசெம்பர் 31 | | பொறுப்புக்கள் | 1980 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **மூலதனக் கணக்கு** | | |
| 15,000,000 | | முதல் ... .. ... ... | 15,000,000 | |
| 64,000,000 | 79,000,000 | மிகை ... .. ... ... | 65,000,000 | 80,000,000 |
| | | **பொறுப்புக்கள்** | | |
| 4,139,947,484 | | சுற்றோட்டத்திலுள்ள தாள் நாணயங்கள் ... | 4,807,602,981 | |
| 181,193,429 | 4,321,140,913 | சுற்றோட்டத்திலுள்ள குத்தி நாணயங்கள் ... | 201,913,058 | 5,009,516,039 |
| | | **வைப்புக்கள்** | | |
| 728,369.702 | | அரசு ... ... ... | 1,345,800,620 | |
| 12,012,495 | | அரச முகவர் நிலையங்களும், அரச நிறுவனங்களும்... | 13,211,080 | |
| 966,034,215 | | வர்த்தக வங்கிகள் ... ... ... | 1,263,674,391 | |
| 2,528,919,886 | | பன்னாட்டு அமைப்புக்களும், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கி நிறுவனங்களும் ... | 2,373,949,480 | |
| 312,753 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூ. 111,736,575/- கொண்ட தொகையை நீக்கிய கட்டாய சேமிப்பு நிதி ... ... | 85,458 | |
| 239,090,680 | 4,474,739,731 | ஏனையவை ... ... ... | 345,814,485 | 5,342,535,514 |
| | 69,121,689 | வெளிநாட்டிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ... | | 428,561,770 |
| | 275,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் ... | | 525,000,009 |
| | 26,250.000 | மூலதன உதவுதொகைக் கணக்கு ... | | 110,000,000 |
| | 7,590.680,268 | ஏனைய பொறுப்புக்களும், கணக்குகளும் ... | | 11,336,040,572 |
| | 16,835,932,601 | | | 22,831,653,904 |

### 1980, திசெம்பர் 31 ஆம் நாள்

| 1979 திசெம்பர் 31 | | 1980 திசெம்பர் 31 |
|---|---|---|
| ரூபா | | ரூபா |
| 967,390,002 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்களையும், தாள் நாணயங்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடத்தினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத்தேய்வையும், உள்ளடக்கும்) நாணயச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட பகிர்வுகளுக்கும் | 2,601,098,160 |
| 1,000,000 | மீதி, 1980 ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற ஆண்டின் தேறிய இலாபமாகும். இதன்பின், நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39(ஆ) இன்படி தேறிய இலாபம் மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது. | 1,000,000 |
| 968,390,002 | | 2,602,098,160 |

அட்டவணை 2.1

## உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள்

### 31ஆம் நாளில் உள்ளபடி

| 1979 திசெம்பர் 31 ரூபா | 1979 திசெம்பர் 31 ரூபா | சொத்துக்கள் | 1980 திசெம்பர் 31 ரூபா | 1980 திசெம்பர் 31 ரூபா |
|---|---|---|---|---|
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 7,238,023,657 | | இலங்கைக்கு வெளியே உள்ள பணங்களும், நிலுவைகளும்... | 3,937,419,823 | |
| 281,523,784 | | *வெளிநாட்டு அரசுகளினதும், அரசுகளற்றவற்றினதும் பிணைகள் ... .. | 466,867,081 | |
| 440,682,355 | 7,960,229,796 | சிறப்பு எடுப்பனவு உரிமை உடைமைகள் ... ... | — | 4,404,286,904 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| | | கடன்களும் முற்பணங்களும் | | |
| 1,136,500,000 | | அரசிற்கு ... ... ... | 1,627,637,810 | |
| 91,244,688 | | ஏனையவற்றிற்கு – நடுத்தர நீண்டகால | 210,131,641 | |
| 556,908,000 | | குறுங்கால ... | 913,769,800 | |
| 2,706,204,611 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ... .. | 9,337,907,082 | |
| 26,250,000 | 4,517,107,299 | நிதி, ஏனைய நிறுவனங்களுக்கான உதவு தொகைகள் .. | 110,000,000 | 12,199,446,333 |
| | 4,358,595,506 | ஏனைய சொத்துக்களும், கணக்குகளும் ... ... | | 6,227,920,667 |
| | | *அரச நிலையங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1 இல் ரூபா 5,441,169/- முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24இல் ரூபா 57,450/- முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூ.2,867,960/- ஆகவும், ரூ. 34,340/- ஆகவும் இருந்தன) | | |
| | 16,835,932,601 | | | 22,831,653,904 |

### முடிவுற்ற ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| 1979 திசெம்பர். 31 ரூபா | | 1980 திசெம்பர் 31 ரூபா |
|---|---|---|
| 968,390,002 | வட்டி, ஏனையவை ... ... | 2,602,098,160 |
| 968,390,002 | | 2,602,098,160 |

**டபிள்யூ இராசபுத்ரம்**
ஆளுநர்

**யூ. ஏ. த. சில்வா**
முதன்மைக் கணக்காளர்

1980ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை அரசியல் அமைப்பின் பிரிவு 154 (1) இற்கு அமையவும், 1971இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42(1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரிமையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (2)இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

**பி. எம். டபிள்யூ. விஜயசூரிய**
கணக்காய்வாளர் நாயகம்

கணக்காய்வு அலுவலகம்,
கொழும்பு–7.
1981, மார்ச் 31

வர்த்தகம், உற்பத்தி தொடர்பான கடன்களையொட்டி அரசின் பிணைகள் வாக்குறுதிச் சான்றிதழ்கள் ஆகியவற்றைப் பிணையாகக் கொண்ட வர்த்தக வங்கிகட்கு வழங்கப்படும் குறுங்காலக் கடன்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம் ஆண்டிற்கு 10 சத வீதத்திலிருந்து 12 சதவீதமாக ஏப்பிறல் 21 ஆம் நாள் தொடக்கம் உயர்த்தப்பட்டது.

எனினும், வங்கி வீதத்தில் வர்த்தக வங்கிகள் மத்தியவங்கியிடமிருந்து பெறும் கடன் தொடர்பாக வரையறைகள் விதிக்கப்பட்டன. ஒவ்வொரு வங்கியும், அரசின் வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின் கீழ் அவைகள் வழங்கிய கடன்கள் நீங்கலாக வங்கிகள், அவைகள் இன்றியமையாத நோக்கங்கட்கு வழங்கியிருந்த முற்பணங்களின் அளவு 1976ஆம் ஆண்டு 30 ஆம் நாளன்று அவ்வாறு வழங்கப்பட்டிருந்த அளவினை மிகாதும் இருப்பின் 1979ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் நாளன்று வங்கிகள், அவைகள் வழங்கியிருந்த கடனைகள், மேலதிகப் பற்றுக்கள், கழிவுசெய்யப்பட்ட நிதியிடப்பட்ட உண்டியல்கள் ஆகியவற்றின் மொத்தத்தின் 4 சதவீத அளவிற்குப் பெறுவதற்கு ஒப்புதலளிக்கப்பட்டவைகளிலும், முற்போந்தவரையறையினை விஞ்சியிருப்பின் விஞ்சிய தொகை 4 சத வீத வறையறையிலிருந்து கழிக்கப்படும்.

மத்தியவங்கி, மேற்கூறப்பட்ட எல்லைகட்கு மேலாகவும் தண்ட வீதத்தின் அடிப்படையில் உயர்ந்து செல்லும் வீதத்திலும் முற்பணங்களை வழங்கியது. 1980ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் தொடக்கம் நடைமுறைக்குவந்த தண்டவீதத்திலமைந்த வட்டிவீதங்கள் மேற்குறிப்பிட்ட வரையறைகட்கு மேலாக ஒவ்வொரு வங்கியும் பெறும் கடன்களின் அளவினை ஒட்டி ஆண்டுக்கு 20 சத வீதத்திலிருந்து 30 சதவீதம்வரை வேறுபடும்.

சான்றிதழ்களைப் பிணையாகக்கொண்டு கூட்டுறவு நிலையங்கட்கும் மற்றும் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் நெல்லினைக்கொள்வனவு செய்யவும, உள் நாட்டில் பயிரிடப்படும் சில குறிப்பிட்ட பயிர்களைக் கொள்வனவு செய்யவும் களஞ்சியப்படுத்தவும் அல்லது விற்பனை செய்வதற்கும், ஒப்புதலளிக்கப்பட்டவர்கட்கும் வர்த்தக வங்கியால் வழஙகப்படும் முற்பணங்கள் தொடர்பாக மத்தியவங்கியால் வர்த்தக வங்கிகட்கு வழங்கப்படும் முற்பணங்கள் மீதான வட்டிவீதம் மாறுது ஆணடொன்றுக்கு 3 சதவீதமாக இருந்தது.

நெல், காய்கறி, மற்றும் குறிப்பிட்ட ஏனைய பயிர்களின் உற்பத்திதொடர்பாக வேளாண்மையாளர்களின் சான்றிதழ்களையும் அல்லது கூட்டுறவு நிலையங்களின் சான்றிதழ்களைப் பிணையாகக்கொண்டு வர்த்தக வங்கிகட்கு வழங்கப்படும் முற்பணஙகளின் மீதான வட்டிவீதம் தொடர்ந்தும் ஆண்டொனறுக்கு $1\frac{1}{2}$ சதவீதமாக இருந்தது.

**அரசின் கணக்குகள்**

வங்கி தொடர்ந்தும் அரசின் திணைக்களங்களினதும் சில குறிப்பிட்ட நியதிச் சபைகளினதும் கணக்குகளைப் பேணி வந்தது. 1980ஆம் ஆண்டின் இறுதி

## வெளிநாட்டுச்செலாவணி

வங்கி ஒவ்வொரு வேலை நாளன்றும், ஐக்கிய அமெரிக்க டொலர் ஸ்டேர்லிங் பவுண், டியூச் மார்க்கு, பிரான்சிய பிராங்கு, யப்பானியயென், இந்திய ரூபாய் ஆகிய ஆறு நாணயங்களின் தந்திமாற்றல்களுக்குரிய அலுவல்சார் செலாவணி வீதங்களை தொடர்ந்தும் நிறுவிவந்தது. 1980ஆம் ஆண்டு இறுதியில் இந்நாணயங்களுக்குரிய செலாவணி வீதங்கள் அட்டவணை 2.2 இல் கொடுக்கப்பட்டுள்ளன. வங்கி தொடர்ந்தும் வர்த்தக வங்கிகளுடன் வெளிநாட்டு நாணயத்தாள்கள் தொடர்பான அலுவல்களில் ஈடுபட்டுவந்தது.

அட்டவணை 2.2

**செலாவணி வீதங்கள்**

| நாணயம் 100 அலகுகட்கு | 1980 இறுதியிலிருந்த நடுவீதம் ரூபாய் |
|---|---|
| ஐ. அ. டொலர் ... ... | 1,800.00 |
| பவுண் ஸ்டேர்லிங் ... ... | 4,269.55 |
| டியூச் மார்க்கு ... ... | 921.25 |
| பிரான்சிய பிராங்கு ... ... | 397.50 |
| யப்பானிய யென் ... ... | 8.7550 |
| இந்திய ரூபாய் ... ... | 228.75 |

### ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியம்

மீளாய்விற்குரிய காலப்பகுதியில் ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியத்தின் (ஆதீஒ) ஊடாக மத்தியவங்கியின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்ந்தும் அதிகரித்து வந்தன. எனினும், தீர்ப்பனவு வகையாக ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியத்திற்கு இலங்கையால் முன்னைய ஆண்டில் செலுத்தப்பட்ட தொகையான ரூ. 7,542 இலட்சத்துடன் ஒப்பிடுமிடத்து இவ்வாண்டின் தொகை ரூ. 6,751 இலட்சமாகும்.

1980ஆம் ஆண்டின் ஒற்றோபர் 1ஆம் நாள் தொடக்கம் தீர்ப்பனவு தொடர்பாக புதியதொரு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, ஒவ்வொரு தனியானதொரு கொடுக்கல் வாங்கல்களினையும் மத்திவங்கியினூடாகத் தீர்ப்பதற்குப்பதிலாக, பங்குபற்றும் நாட்டிலுள்ள தொடர்பாளர்களுடன் வர்த்தக வங்கிகள் தாமாகவே தங்கள் சொந்தக் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்த பின்னர் அவர்களின் தொடர்பான கணக்குகளை நிதியிடுவதற்கு அல்லது மேலதிகமிகைகளை மாற்றுவதற்கு மட்டும் மத்தியவங்கிகளை நாடுவதற்கு இசைவளிக்கப்பட்டது.

### மீளத் தாய்நாடு செல்லும் இந்தியக் குடிகட்கான உதவுதொகையும் நன்கொடையளிப்பும்



யில் அரசின் கணக்குகள் கிளையில் தொழிற்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை சென்ற ஆண்டைக் காட்டிலும் 11 கணக்குகளால் அதிகரித்துக் காணப்பட்டது.

### திறைசேரி உண்டியல்கள்

திறைசேரி உண்டியல்கட்கான மத்திய வங்கியின் கழிவுவீதம் அத்தகைய திறைசேரி உண்டியல்கள் கேள்வியால் அல்லது மத்திய வங்கியால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால் அத்தகைய வீதத்திற்கு மேலாகத்தொடர்ந்தும் 1/8 சத வீதமாக இருந்தது.

### கட்டாயச் சேமிப்புக்கள்

1971ஆம் ஆண்டின் எண் 6 கொண்ட கட்டாய சேமிப்புச்சட்டம், 1972 ஆம் ஆண்டின் எண் 15 கொண்ட வருமானம் கட்டாயச் சேமிப்பு என்பன மீதான உச்சவரப்பு ஆகியவற்றின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட பணத்திற்குகாவலனுகை மத்தியவங்கி தொடர்ந்தும் இருந்ததுடன், அரசின் சார்பாக கட்டாயச் சேமிப்புக்கள் நிதியத்தை நிர்வகித்தும் வந்தது. ஆண்டுக்காலப்பகுதியில்வங்கி வழங்குநர்கட்கு ரூ. 18,996, 503.78 (பெறப்பட்ட 4900 விண்ணப்பங்கள் உட்பட) கொண்ட தொகையினைச் செலுத்தியது.

## வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம்

1979ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம் 1980ஆம் ஆண்டில் தொடர்ந்தும் தொழிற்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இலங்கையில் வங்கித்தொழில்புரியும் வர்த்தக வங்கிகள், வதிவற்றோர், கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகள், சுட்டப்பட்ட வதிவோர் ஆகியோர்களுடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதன்பொருட்டு அவற்றின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகட்குப் புறப்பாக, வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் கிளைகளைத் தொழிற்படுத்த இசைவளிக்கப்பட்டன. இக்கிளைகள் குறிப்பிட்ட எந்த நாணயத்திலும் தவணை, கேள்விவைப்புக்களை (சேமிப்புக்குக் கணக்குகள், காசோலை மூலம் கணக்குகளிலிருந்து நிதியைப்பெறக்கூடிய கணக்குகள் நீங்கலாக) ஏற்கவும், கடன்களைப்பெறவும், முற்பணங்களை வழங்கவும் இசைவளிக்கப்பட்டன, எனினும் இக்கிளைகள் ஏற்றுமதியால் பெறப்படும் வரவுத்தொகைகளை வைப்புக்களாக ஏற்க இசைவளிக்கப்படவில்லை. இத்திட்டத்தின்கீழ் ஐக்கிய அமெரிக்க டொலர், பவுண் ஸ்டேர்லிங், பிரான்சிய பிராங்கு, யப்பானியயென், டச்சு இல்டர், சுவீடன் குரோன், சுவிசுப்பிராங்கு, டியூச்மார்க்கு, ஒங்கொங் டொலர். சிங்கப்பூர் டொலர் என்பன குறிப்பிட்ட நாணயங்களாக விளங்கின.

## வங்கித்தொழில் அபிவிருத்தி

1980 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வெளிநாட்டிலுள்ள நான்கு வங்கிகளிடமிருந்து இலங்கையில் கிளைகளை நிறுவுவதற்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. இவ்விண்ணப்பங்கள்வங்கித்தொழில் அபிவிருத்திபிரிவால் ஆராயப்பட்டுப் பின்னர் நாணயச்சபையின் தகவுரைகளுடன் மாண்புமிகு நிதி திட்டமிடல் அமைச்சரின் ஒப்புதலிற்கு வைக்கப்பட்டன. 1979இன் பின்னர் கிடைத்த 11 விண்ணப்பங்களில் 7 விண்ணப்பங்கள் முடிவு செய்யப்படாமல் இருந்தன. இம் மொத்தத்தில் 8 வங்கிகள் 1980 இல் கிளைகளைத்திறப்பதற்கு மாண்புமிகு நிதி, திட்டமிடல் அமைச்சர் ஒப்புதல் வழங்கினர். வங்கிகளில் 7 வெளிநாட்டு வங்கிகள்1980 ஆம் ஆண்டுக்காலத்தில் இலங்கையில் அலுவல்களைத் தொடங்கின.

இவ்வாண்டுக்காலப்பகுதியில் இலங்கை வங்கி, மக்கள்வங்கி ஆகிய இரு அரச வங்கிகளும் முறையே 27,30 கிளைகளைத்திறந்தன. அட்டன் நெசனல் வங்கி ஒரு கிளையைத்திறந்தது. 1980ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் இலங்கையில் தொழிற்படும் எல்லா வங்கிகளினதும்மொத்தக்கிளைகள் 630ஆக விளங்கின. இத்தொகை வேளாண்மை உற்பத்தி நிலையங்களில் தொழிற்படும் 145 வேளாண்மைப் பணி நிலையங்களையும் உள்ளடக்குகிறது.

## நாணய வழங்கல்

1980ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த நாணயச் சுற்றோட்டம் ரூ. 50,095 இலட்சமாக அமைந்தது. இது 1979ஆம் ஆண்டின் டிசெம்பரிலிருந்த சுற்றோட்டத்திலும் பார்க்க ரூ. 6,883 இலட்சங்கொண்டதொரு அதிகரிப்பாகும். 1980 ஆம் ஆண்டில் மொத்த நாணயச்சுற்றோட்டம் முன்னைய ஆண்டின் ரூ. 7,835 இலட்சத்தைக் காட்டிலும் ரூ. 6,676 இலட்சத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. இம்மொத்த அதிகரிப்பில் ரூ. 50, ரூ. 100 இனத்தாள்கள் முறையே ரூ. 2,647 இலட்சத்தையும், ரூ. 2,852 இலட்சத்தையும் கொண்டிருந்தன. 1979ஆம் ஆண்டின் ரூ. 291 இலட்சத்துடன் ஒப்புநோக்குமிடத்து 1980 ஆம் ஆண்டில் நாணயக் குத்திகளின் சுற்றோட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ 207 இலட்சமாகும். இம் மொத்த அதிகரிப்பில் ரூ. 1,50 சத நாணயங்கள் ரூ. 125 இலட்சத்தைக் கொண்டிருந்தன.

இலங்கையில் முதன் முறையாக ரூ. 10 நாணயத்தாளிற்கு ஏற்பட்ட கேள்வியினைக் குறைக்கும் பொருட்டு ரூ. 20 பெறுமதிகொண்ட இனத்தாள் புழக்கத்தில் விடப்பட்டது.

## வங்கி மேற்பார்வை

நாணய விதிச்சட்டம் பிரிவு 29இற்கு ஏற்ப 1980ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் ஒன்பது வங்கி நிறுவனங்களில் மேலாய்வுகளை மேற்கொண்டு, ஆறு வங்கிகளின் மேலாய்வுகளை முடிவுறுத்தியது.

மேலும் திணைக்களம், 1979ஆம் ஆண்டின் என் 27கொண்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நிதிக்கூட்டு நிலையங்களைக் கட்டுப்படுத்துவதற்கான தொடக்க வேலைகள் தொடர்பாக ஈடுபட்டிருந்தது. நிதிக் கூட்டுநிலையங்களின் பதிவு, உரிமைச்சான்றிதழ்ப்படுத்தல் தொடர்பான விதிமுறைகள் நாணயச் சபையால் உருவாக்கப்பட்டன. இவ்வாண்டுக்காலப்பகுதியில் பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டு 56 நிதிக்கூட்டு நிலையங்கள் சபையுடன் பதிவுசெய்யப்பட்டன. நிதிக்கூட்டு நிலையங்களின் மீதான மேலாய்வும் 1980 இல் மேற்கொள்ளப்பட்டது.

வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளால் தொடங்கப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் கிளைகளின் கொடுக்கல் வாங்கல்களை உன்னிப்பாகக் கவனித்தல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தினை திணைக்களம் தொடர்ந்து மேற்கொண்டது.

## அபிவிருத்தி நிதி

1980ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தன. மத்திய வங்கியின் நடுத்தர, நீண்டகாலக்

கொடுகடன் நிதியத்தின் கீழ் அமைந்த கடன் வழங்கல் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தமை 1980இல் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாகும். இவ் அபிவிருத்தி நாட்டில் தொழிற்படும் வர்த்தக வங்கிகள், கொடுக்டன் நிறுவனங்கள் என்பன அவற்றின் நடுத்தர, நீண்டகால நிதியிடல் தொழிற்பாடுகட்கு இந்நிதியத்தின் மூலவளங்களில் கூடியளவில தங்கியிருக்கும் தன்மையைக் காட்டுகிறது. கொடுகடன் உத்தரவாத திட்டங்களை நோக்கும் பொழுது சிறிய, நடுத்தர கைத்தொழில்கள் கொடுகடன் உத்தரவாத விலைத் திட்டம் தொடர்பாக பெருமளவு விண்ணப்பங்கள் 1980ஆம் ஆண்டில் கிடைத்துள்ள வேளையில், சிறிய திட்ட கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதத் திட்டம் தொடர்பாக கிடைத்த விண்ணப்பங்களில் வீழ்ச்சியொன்று காணப்பட்டது. திணைக்களம், அமைச்சுக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு அபிவிருத்தி செயல் திட்டங்களை உருவாக்கி, நடைமுறைப்படுத்துவதில் பெருமளவில் ஈடுபட்டது. மேலும் திணைக்களம் மாத்தறையில் நிறுவப்படவிருக்கும் மத்திய வங்கியின் கிளையின் தொடக்கவேலையினை மேற்கொண்டதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறப்பட்டு நிதியிடப்பட்ட கிராமக் கொடுகடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதிலும் ஈடுபட்டது.

## நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியம்

கடந்த பத்தாண்டு காலப் பகுதியில் பொருளாதாரத்தில் வேளாண்மை, கைத்தொழில் ஆகிய துறைகளில் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் தேவைகளை முழுமைப்படுத்துவதில் வர்த்தக வங்கிகள் கொடுகடன் நிறுவனங்கள் ஆகியவற்றை ஊக்குவிப்பதே நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழ் வழங்கப்பட்ட மீள நிதியிடல் திட்டத்தின் முதன்மை நோக்கமாக இருந்தது. 1979ஆம் ஆண்டின் இறுதி நடுப்பகுதியில் பொருளாதாரத்தின் முதன்மைத்துறைகட்கு மூலவளங்களை வழிப்படுத்துவதன்பொருட்டு மத்திய வங்கியால் இத்திட்டத்தில் முதன்மையானதொரு மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. மூலவளங்களை பல்வேறு துறைகளில் சிறப்பான தேவைகள், விதிகள், நிலைமைகள், அவற்றிற்குரிய சிக்கல்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மீளநிதியிடல் தொகைகளையும் வீதத்தையும் மாற்றியமைத்ததன் வாயிலாக மூலவளங்களை மீள வழிப்படுத்தலில் அடைவு எய்தப்பட்டது. ஏற்றுமதிக் கைத்தொழில்களின் அபிவிருத்தியில் மிகவும் கூடியளவில் வர்த்தக வங்கிகளும், கொடுகடன் நிறுவனங்களும் பங்கேற்பதன் பொருட்டு மீளநிதியிடல் திட்டத்தின் நோக்கம் 1980ஆம் ஆண்டில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கி, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் இணைந்து ஒரு கொடுகடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால், ஏற்றுமதி ஒரு கைத்தொழில் ஏற்றுபதி சார்ந்ததொரு கைத்தொழில் என வரையறை செய்யப்படுமிடத்து அது இலங்கையில் தொழிற்படும் எந்தவொரு வர்த்தக வங்கியிடமிருந்தும் கொடுகடன் நிறுவனங்களிலிருந்தும் சலுகை வீதத்தில் நிதியிடலைப் பெறத் தகுதியுடையதாகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்திலிருந்து ஆண்டொன்றிற்கு 10 சதவீத மீளநிதியிடல் வீதத்தில் கடனில் 80 சதவீத அளவிற்கு மீளநிதியிடலைப் பெறத் தகுதியுடையதாகிறது. இத்திட்டத்தின்கீழ் கடன் வழங்குவதற்கான வீதம் 13 சதவீதமாகும்.

மத்தியவங்கியின் மீளநிதியிடல் திட்டத்தின்கீழ் பின்வரும் நான்கு செயற்திட்டங்களின் பிரிவுகள்/கடன்கள் உதவிக்கு தகுதியுடையனவாகின்றன.

(1) பிரிவு I அமைச்சுகளால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களின் கீழ் வேளாண்மை, கடற்றொழில் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்குகிறது.

(2) பிரிவு II ஏற்றுமதிக்கான பொருட்கள், பண்டங்கள் ஆகியவற்றின் உற்பத்திக்கு முன்னோடியாக இருக்கும் வேளாண்மைப் பொருட்களின் பயிரிடல், வேளாண்மை கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிக்கான உற்பத்தி, பதனிடல் வசதிகளை உருவாக்குதல் போன்றன உள்ளடங்க இலங்கையிலிருந்து ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கு அல்லது அபிவிருத்திசெய்வதற்கு வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்குகிறது.

(3) பிரிவு III வரிச்சலுகைகளைக்கொண்டுள்ள ஒப்புதல் பெறப்பட்ட முதலீடுகள் (1979 ஆம் ஆண்டின் எண் 28 கொண்ட இறைவரிச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ்) அமைச்சுக்களால் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்கட்குப் புறம்பாக வேளாண்மை, மீன்பிடி ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்குகின்றது. அத்துடன்—

(4) பிரிவு IV மேற்கூறப்பட்ட நோக்கங்கள் நீங்கலாக, ஏனைய நோக்கங்கட்கு வழங்கப்பட்ட கடன்கள் நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 88இல் கூறப்பட்டவாறு "உற்பத்தி நோக்கம்" என்ற கருத்தின் கீழ் வருகின்றதென நாணயச் சபை கருதுமாயின் அக்கடன்களையும உள்ளடக்குகிறது.

1980 ஏப்ரலில் வங்கிவீதம் 10 சத வீதத்திலிருந்து 12 சத வீதமாக மாறியதைத் தொடர்ந்து மீள நிதியிடல் வீதங்கள் சீராக்கம் செய்யப்பட்டன. எனினும், திருத்தப்பட்ட வீதங்கள் ஏற்கனவே நடைமுறையிலுள்ள பிரிவு 1இன் கீழான கொடுகடன் திட்டங்களுக்கு ஏற்புடையதாகாது. கீழேயுள்ள அட்டவணை, நடைமுறையிலுள்ள மீள நிதியிடல் திட்டத்தின் முதன்மையான பண்புகளைச் சுருக்கமாகத் தருகிறது.

அட்டவணை 2.3

நடுத்தர, நீண்டகால மீள் நிதியிடல்

| பிரிவு | மீள்நிதியிடல் அளவு (மொத்தக் கடனின் சதவீதம்) | கடன்காலப் பகுதி (ஆண்டுகள்) | மீள்நிதியிடலின் வட்டிவீதம் % | கொடுகடன் நிறுவனத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்ட தொகை % | செயற்றிட்டத்தின் மொத்தச் செலவுக்காக தொழில் முயற்சியொன்று செலுத்தவேண்டிய ஆகக் குறைந்த தொகை % |
|---|---|---|---|---|---|
| I | 100 | 3-15 | 8½ | 4 | 10 |
| II | 80 | 3-15 | 10 | 3 | 20 |
| III | 60 | 3-15 | 11 | 5 | 20 |
| IV | 60 | 3-15 | 13 | 5 | 20 |

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்திடமிருந்து உதவி பெறத் தகுதியுடைய செயற்றிட்டங்கள் பொதுமக்களுக்குப் பங்குகளை வழங்கவேண்டுமென்ற தேவைப்பாடே 1980இல் அறிமுகப்படுத்தப்பட்ட மேலுமொரு மாற்றமாகும், கூட்டுநிலைய உடைமையை விரிவாக்குதலை ஊக்குவிப்பதற்கும், நாட்டில் இருப்புச் சந்தைமுறையை ஊக்குவிப்பதற்கானதொரு வழிமுறையாகவும் இத்தேவைப்பாடு நாணயச் சபையினால் எடுத்துக் கூறப்பட்டது. மீள்நிதியிடல் உதவி வழங்கப்பட்ட II, III, IV ஆகியவற்றின் பிரிவுகளின் கீழ்வரும் ரூ. 50 இலட்சத்திற்கு விஞ்சிய எல்லாக் கடன்களுக்கும் இத்தேவைப்பாடு ஏற்புடையதாகிறது. இத்தேவைப்பாட்டிற்குரிய நியதிகள், நிபந்தனைகளின் தொகுப்பு கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.4

| வங்கிக் கடனின் அளவு | | வழங்கப்படவேண்டிய ஆகக் குறைந்த மூலதனப்பங்கு (செயற்றிட்டத்தின் மொத்தச் செலவின் சதவீதமாக) % | உடைமையினை விரிவாக்குவதற்கான மூலதனப் பங்குகள் வழங்குவதற்குரிய காலஎல்லை (ஆண்டுகள்) |
|---|---|---|---|
| கூடியது ரூ. | குறைந்தது ரூ. | | |
| | 5,000,000 | இல்லை | இல்லை |
| 5,000,000 | 10,000,000 | 5 | 5 |
| 10,000,000 | 25,000,000 | 5 | 4 |
| 25,000,000 | 50,000,000 | 10 | 3 |
| 50,000,000 | | 15 | 2 |

வர்த்தக வங்கிகளினூலும், கொடுகடன் நிறுவனங்களினூலும் சிறிய அளவில் கடன் பெறுபவர்களுக்கு வழங்கப்பட்ட ரூ. 50,000 - ரூ. 500,000 க்குமிடையிலான சிறு கடன்களைப் பொறுத்தவரை நிதியத்தின் வசதிகளின் பயன்பாட்டினை பெறுவதற்காக விண்ணப்பங்களை ஆய்வது தொடர்பான ஆவணத் தேவைப்பாடுகள், நடைமுறைகள் ஆகியன இலகுவாக்கப்பட்டன. 1980இன் இறுதிக் காலாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இம்மாற்றம் சிறு அளவில் கடன் பெறுபவர்களுக்கு நிதியத்தின வசதிகளும சலுகைகளும் இலகுவில் வங்கிகளால் ஏற்படுததிக் கொடுக்க வழியமைத்தது.

1979இன் ரூ. 413 இலட்சங்கொண்ட மொத்த அளவான கடன்களுக்காக மீள்நிதியிடல் வாயிலாகப் பெறப்பட்ட ரூ. 309 இலட்சத்திற்கெதிராக 1980இல் ரூ. 1,750 இலட்சங்கொண்ட பிரிவுகள III, IV ஆகியவற்றின் கீழ் வரும் கடன்களுக்காக நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்திடமிருந்து மீள்நிதியிடல் வாயிலாக ரூ. 1,217 இலட்சங்கொண்ட தொகைக்கு ஒப்புதலளிக்கப்பட்டது. நோக்க அடிப்படையில மீள்நிதியிடல் பாகுபாடொன்று கீழே தரப்பட்டுள்ளது,

அட்டவணை 2.5

நடுத்தர நீண்டகால மீள்நிதியிடலுக்கான ஒப்புதல்கள் — 1979 / 80

ரூபா. '000

| நோக்கம் | 1979 | | 1980 | |
|---|---|---|---|---|
| | கடன் தொகை | மீளநிதியிடல்தொகை | கடன் தொகை | மீள நிதியிடல்தொகை |
| வேளாண்மை ... ... | 1,050 | 1,050 | 1,085 | 685 |
| கடற்றொழில் ... ... | 1,751 | 1,751 | — | — |
| கைத்தொழில் ... ... | 38,101 | 27,683 | 62,084 | 48,919 |
| உணவகங்கள் ... ... | — | — | 51,953 | 36,105 |
| ஏனையவை .. .. | 465 | 465 | 60,032 | 36,026 |
| மொத்தம் ... ... | 41,367 | 30,949 | 175,154 | 121,735 |

இவ்வாண்டுக் காலப்பகுதியில் நான்கு செயற்றிட்டங்களுக்காக ரூ.780 இலட்ச அளவுக்கு மீள்நிதியிடல் ஒதுக்குக்கான திட்டத்தின் பிரிவு 1இன் கீழ் நிதிகளை மத்திய வங்கி ஒதுக்கீடுசெய்தது. அத்துடன், ஆண்டுத் தொடக்கத்தில் நடைமுறையிலிருந்த ஏனைய எட்டுக் கொடுகடன் திட்டங்களுக்கும் மத்திய வங்கி தொடர்ந்து நிதியத்தினை வழங்கிவந்தது. இக்கொடுகடன் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 2,580 இலட்சங்கொண்ட மொத்தத் தொகையில் ரூ,930 இலட்சம் 1980 இன் இறுதியில் பயன்படுத்தப்பட்டது. கீழேயுள்ள அட்டவணை ஒதுக்கப்பட்ட தொகையினையும், ஒவ்வொரு திட்டத்திற்குமான பயன்பாட்டினையும் தருகிறது.

## அட்டவணை 2.6

### அமைச்சுக்களினால் உருவாக்கப்பட்டு மத்திய வங்கியின் மீள் நிதியிடல் திட்டத்தின் வகுப்பு 1இன் கீழ் நாணயச் சபையினால் மீள நிதியிடலுக்காக ஒப்புதலளிக்கப்பட்ட கடன் திட்டங்கள்

| கடன் திட்டத்தின் பெயர் | மீள் நிதியிடல் ஒதுக்கீடுகள் ரூ.ப.இ. | 31.12 1980இல் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ.ப.இ. | 31.12 1980இல் பயன்படுத்தப்படாத தொகை ரூ.ப.இ. | செயற்றிட்டம் தொடங்கிய நாள் | ஒதுக்கீடுகளின் பங்கீட்டுக்கான காலப் பகுதி ஆண்டுகள் |
|---|---|---|---|---|---|
| அ. 1980ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கொடுகடன் திட்டங்கள். | | | | | |
| 1. ஓச்சிட் மரச் செய்கைக்கான கொடுகடன் திட்டம் – இலங்கை வங்கி / வரையறுக்கப்பட்ட இலங்கை புகையிலைக் கம்பனி .. | 4.5 | 0.50 | 4.00 | 1979.04.03 | 3 |
| 2. தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம் . | 30.0 | 7.85 | 22.15 | 1979.03.26 | 3 |
| 3. கடற்றொழில்துறை வங்கி நிதியிடல் திட்டம் ... | 107.0 | 56.11 | 50.89 | 1979.07.02 | 3 |
| 4. குளநீர்ப்பாசனப் புத்தாக்கப்படுத்தல் செயற்றிட்டம் .. | 7.70 | 7.70 | — | 1979.06.02 | 1 |
| 5. நுவரெலியா மாவட்டத்தில் பாற்பண்ணை அபிவிருத்திக்கான கடன் திட்டம் ... | 10.0 | 1.00 | 9.00 | 1979.08.22 | 3 |
| 6. குருநாகலை மாவட்டத்துக்கான பண்ணைப் பொறிகள் கடன் திட்டம் ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் செயற்றிட்டம் ... | 40.0 | 15.00 | 25.00 | 1979.10.28 | 5 |
| 7. சம்மாந்துறை தேர்தற்றொகுதியில் பாற்பண்ணை அபிவிருத்திக்கான (முன்னோடிச் செயற்றிட்டம்) கடன் திட்டம் ... | 0.12 | — | .12 | 1979.11.27 | 3 |
| 8. மகாவலி செயற்றிட்டப்பகுதியில் குடியேறியவர்கள் இழுபொறிகளைக் கொள்வனவு செய்வதற்கு உதவும் கொடுகடன் திட்டம் ... | 55.0 | 5.00 | 50.00 | 1979.11.19 | 3 |
| ஆ. 1980ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்கள். | | | | | |
| 1. உள்நாட்டுக் கடற்றொழில் வங்கி நிதியிடல் திட்டம் ... | 5.2 | — | 5.20 | 1980.08.29 | 2 |
| 2. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் நிறுவப்படும் வளமாக்கிக் களஞ்சியங்களுக்கான கொடுகடன் திட்டம் ... | 11.5 | — | 11.50 | 1980.10.13 | 1 |
| 3. அபுதாபியினால் நிதியளிக்கப்பட்ட வடமேற்குக் கரைக் கடற்றொழில் அபிவிருத்திச் செயற்றிட்டம் ... | 60.0 | — | 60.00 | 1980.10.13 | 3 |
| 4. ஓச்சிட் மரச் செய்கைக்கான கொடுகடன் திட்டம் –மக்கள் வங்கி/சர்வோதய இயக்கம்/லக்மல்சல | 3.0 | — | 3.00 | 1980.12.10 | 5 |
| மொத்தம் .. | 334.2 | 93.16 | 240.86 | | |

மேலே கொடுக்கப்பட்ட எண் தொகைகளிலிருந்து மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிதியிடலின் அளவில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்பட்டதென்பது தெளிவாகிறது. பிரிவுகள் III, IV ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட மீள் நிதியிடலின் அளவிலேற்பட்ட அதிகரிப்பு குறிப்பிடத்தக்கதாகக் காணப்பட்டது. பிரிவு I ஐப் பொறுத்தவரையில் ஒதுக்கப்பட்ட மீள் நிதியிடல் அளவு கணிசமாயிருந்தபோதும், கடற்றொழில் கொடுகடன் திட்டந் தவிர்ந்த பல திட்டங்களின் கீழ் இந்நிதியங்களின் பயன்பாட்டு வீதம் குறைவுடையதாகக் காணப்படவில்லை. எனினும் இத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலைத் தடை செய்யும் சில முட்டுக்கட்டைகளை நீக்குவதற்காக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் 1981இல் இத்திட்டங்களின்கீழான நிதியங்களின் பயன்பாட்டு வீதத்தில் முன்னேற்றம் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**மாத்தறைக் கிளை**

இத்திணைக்களம், மத்திய வங்கியின் மாத்தறைக் கிளை நிறுவுதலின் பின் முதன்மையான பங்கொன்றை வகிக்குமெனக் கருதப்பட்டது இது தொடர்பில் மாத்தறை மாவட்டத்தில் வேளாண்மை, சிறு கைத்தொழில்கள் அபிவிருத்திக்கான கொடுகடன் தேவைகள் பற்றிய ஆய்வொன்றை மத்திய வங்கி மேற்கொண்டது. இந்த ஆய்வின் நேரடி விளைவாக, மாத்தறை மாவட்டத்தில் வேலையற்ற இளைஞர்களைச் சிறுகைத்தொழில்களைப் பொறுப்பேற்கும்படி ஊக்குவிப்பதற்காக மத்திய வங்கியினால் கொடுகடன் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. வங்கியின் மாத்தறை அலுவலகம் திறக்கப்படும்போது அதனூடாக இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

**கிராமக் கொடுகடன் செயற்றிட்டம்**

இத்திணைக்களம் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்ற நிதியுதவியினால் கிராமக் கொடுகடன் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்பான தயாரிப்பு வேலைகளில் மிகவும் ஊக்கத்துடன் ஈடுபட்டுள்ளது. இது-

(i) கிராமக் கொடுகடனுடன் தொடர்பான தொழிற்பாடுகளை உள்ளடக்குவதன் மூலம் இத்திணைக்களத்தின் தொழிற்பாடுகளை விரிவாக்கல்;

(ii) கிராமக் கொடுகடன் மதியுரைச் சபையை உருவாக்கல்;

(iii) வர்த்தக வங்கி ஆளணியைக் கிராமக் கொடுகடன் வேலையில் பயிற்றுவிப்பதற்காக கிராமக் கொடுகடன் பயிற்சி நிறுவனமொன்றை நிறுவுதல்;

(iv) இழுபொறிகள், மின்தெளிப்புக்கள், நீரிறைக்கும் பொறிகள், சிறு வேளாண்மையாளருக்குக் கிடைக்கத்தக்க எருதுகள், ஆகியவற்றிற்கு நிதியீட்டல் செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைக்கப்பெறும் நிதியங்களைப் பயன்படுத்தலும், நாட்டின் பல பகுதிகளிலும் குழாய்க் கிணறு, கிணறு தோண்டல் ஆகியவற்றுக்கான திட்டமொன்றைப் பொறுப்பேற்றலும்;

(v) கிராமக் கொடுகடனுடன் தொடர்புடைய எல்லாக் கொள்கை விடயங்களிலும் தீர்மானம் எடுப்பதில் உதவுவதற்காக நன்கு திட்டமிடப்பட்ட ஆராய்ச்சித் திட்டமொன்றைப் பொறுப்பேற்றல் ஆகியவற்றில் இத்திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களின் விளைவாக, இத்திணைக்களத்தின் நடவடிக்கைகள் 1980இல் ஒரு புத்தாக்கத்தைப் பெற்றன. இத்திணைக்களத்திற்கு நியமிக்கப்பட எதிர்பார்க்கப்படும் பல மதியுரையாளர்களின் உதவியுடன் கிராமக் கொடுகடன் பிரிவின் வேலைகள் துரிதப்படுத்தப்படும்.

## பொதுப்படுகடன்

மொத்தப் பொதுப்படுகடன் இவ்வாண்டில் ரூ. 16,180,907,054 ஆல் அதிகரித்து நிதியாண்டிறுதியில் ரூ. 51,655,656,319 ஆக விளங்கியது. உள்நாட்டுப் படுகடனின் அதிகரிப்பு ரூ. 9,744,717,957 ஆகவும், வெளிநாட்டுப் படுகடனின் அதிகரிப்பு ரூ. 6,436,189,097 ஆகவும் விளங்கியது. மொத்தப் பொதுப் படுகடனிலேற்பட்ட அதிகரிப்பு குறிப்பாகத் திறைசேரி உண்டியல்கள், ரூபாக் கடன்கள், மத்திய வங்கி முற்பணங்கள், சிறப்புக் கடன்கள் வெளிநாட்டுக் கடன்கள் ஆகியவற்றிலேற்பட்ட அதிகரிப்புக்களையுள்ளடக்கியது. நிருவாகக் கடன்பாடுகளும், வரி ஒதுக்குச் சான்றிதழ்களும் வீழ்ச்சிகளைக் காட்டின. பொதுப் படுகடனின் உள்ளடக்கம் அட்டவணை 2.9இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.9

பொதுப்படுகடனின் உள்ளடக்கம்—1979 உம் 1980 உம்

(ரூபாய்களில்)

| விடயம் | வெளி நிற்கும் 31.12.1979 | வெளி நிற்கும் 31.12.1980 | ஆண்டில் நிகழ்ந்த மாற்றம் |
|---|---|---|---|
| 1. உள்நாட்டுக்கடன் .. | 19,634,127,737 | 29,378,845,694 | + 9,744,717,957 |
| 1.1 நீண்டகாலக் கடன் .. | 15,469,581,462 | 17,938,682,557 | + 2,469,101,095 |
| அ. ரூபாக்கடன்கள் .. | 14,929,061,600 | 17,610,978,400 | + 2,681,916,800 |
| ஆ. நிருவாகக்கடன்பாடுகள் .. | 540,446,023 | 327,630,318 | — 212,815,705 |
| இ. தேசிய அபிவிருத்தி முறிகள் .. | 73,839 | 73,839 | — |
| 1.2 குறுங்காலக் கொடுகடன் .. | 4,164,546,275 | 11,440,163,137 | + 7,275,616,862 |
| அ. திறைசேரி உண்டியல்கள் .. | 3,000,000,000 | 9,800,000,000 | + 6,800,000,000 |
| ஆ. வரி ஒதுக்குச் சான்றிதழ் .. | 28,046,275 | 12,525,327 | — 15,520,948 |
| இ. மத்தியவங்கி முற்பணங்கள் .. | 1,136,500,000 | 1,319,200,000 | + 182,700,000 |
| ஈ. சிறப்புக்கடன்கள் .. | — | 308,437,810 | + 308,437,810 |
| 2. வெளிநாட்டுக்கடன்பாடு .. | 15,840,621,528 | 22,276,810,625 | + 6,436,189,097 |
| 2.1 செயற்றிட்டக்கடன்கள் .. | 5,569,534,723 | 6,784,273,556 | + 1,214,738,833 |
| 2.2 பண்டக்கடன்கள் .. | 8,900,894,901 | 11,791,107,159 | + 2,890,212,258 |
| 2.3 ஏனைய கடன்கள் .. | 1,370,191,904 | 3,701,429,910 | + 2,331,238,006 |
| மொத்தப் பொதுப்படுகடன் .. | 35,474,749,265 | 51,655,656,319 | + 16,180,907,054 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## உள்நாட்டுக் கடன்

### (அ) ரூபாக் கடன்கள்

1980 ஆம் நிதியாண்டிற்கான அரச வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம், 1979 ஆம் நிதியாண்டில் ரூ. 29,500 இலட்சங்களுக்கு மாறாக உள்நாட்டு வங்கியல்லா மூலங்களிலிருந்து ரூ. 31,000 இலட்சங்களைத் திரட்ட எதிர்பார்த்தது. ஒவ்வொன்றும் ரூ. 4,000 இலட்சம் கொண்ட நான்கு கடன்கள் 1980இன் முதல் அரைப்பகுதியில் மிதக்க விடப்பட்டதுடன் இக்கடன்கள் ஆண்டிற்கு 10 சதவீத வட்டியுடன் 10—12 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத்தையும் கொண்டிருந்தன.

1980 ஏப்பிறலில் அரசு, ரூபாக்கடன்களின் முதிர்ச்சிக் காலத்தை 3 ஆண்டுகளுக்குக் குறைப்பதென்றும் வட்டிவீதத்தை ஆண்டிற்கு 16 சதவீதத்திற்கு உயர்த்துவதென்றும் முடிவு செய்தது. இதன்படி 1980 யூலையிலிருந்து மிதக்கவிடப்பட்ட எல்லாக்கடன்களும் மூன்று ஆண்டுகள் முதிர்ச்சிக்காலத்தையும் ஆண்டிற்கு 16 சதவீத வட்டியையும் கொண்டிருந்தன. இக்கடன்களின் பொருட்டான கடன்கரைப்பு நிதிய உதவுதொகைகளின் ஆண்டு ஒதுக்கு ஆண்டிற்கு 5 சதவீதத்திலிருந்து 35½ சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டில் ரூபாக் கடன்கள் மூலம் திரட்டப்பட்ட மொத்தத்தொகை ரூ. 28,015 இலட்களாகும். எல்லா ரூபாக்கடன்களும் 1979ஆம் ஆண்டின் எண் 71 கொண்ட குறை நிரப்புச் சட்டத்தின் கீழ் திரட்டப்பட்டன.

தேசிய சேமிப்பு வங்கி, இணைந்த முதலீட்டு நிதியம், ஊழியர் சேமநிதியம் ஆகியன ரூபாக்கடன்களுக்கான முதன்மை வழங்குநர்களாக இருந்தன. அத்துடன் ரூபாக்கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூ. 1,000 இலட்சம்கொண்ட தொகுதிக் கடனை நகர அபிவிருத்தி மேலான்மை சபையின் சார்பில் பொதுப்

படுகடன் திணைக்களம் திரட்டியது. இத்தொகுதிக் கடனிற்கு ஊழியர் சேம நிதியம் ரூ. 357 இலட்சத்தை வழங்கியதுடன் எஞ்சிய தொகை இணைந்த முதலீட்டு நிதியத்தினால் வழங்கப்பட்டது. 1979ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடன்கரைப்பு நிதியம், ஊழியர் சேமநிதியம் ஆகியன 1980 ஆம் ஆண்டில் ரூபாக்கடன்களில் தமது முதலீடுகளை அதிகரித்த வேளையில் தேசிய சேமிப்பு வங்கியினதும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினதும் உதவுதொகைகள் வீழ்ச்சியைப் பிரதிபலித்தன.

இவ்வாண்டின்போது முதிர்ச்சிபெற்ற ரூ. 119, 583,200 கொண்ட ஐந்து, ரூபாக் கடன்கள், குறிப்பிட்ட கடன்கரைப்பு நிதியங்களின் பணத்தைப் பயன்படுத்தி மீளச் செலுத்தப்பட்டன. கடன் கரைப்பு நிதியத்தின் மிகையான ரூ. 19,005,560. 55 கொண்ட தொகை திரட்டு நிதியத்தில் வரவுவைக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டின்போது ரூபாக்கடன்களின் பொறுப்பிலுள்ள தேறிய அதிகரிப்பு ரூ. 2,681,916,800 ஆக விளங்கியது.

**(ஆ) கடன்கரைப்பு நிதியங்கள்**

1980ஆம் நிதி ஆண்டு முடிவில் ரூபாக்கடன்களை மீட்பதற்கென நிறுவப்பட்ட கடன் கரைப்பு நிதியங்களின் பெறுமதி ரூ. 4,876,627 663.27ஆக விளங்கி இவ்வாண்டில் ரூ. 913,731,601,89 கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலித்தது. அதிகரிப்பு பின்வருமாறு ஏற்பட்டது:

| | | |
|---|---|---|
| 1. 1980 ஆம் ஆண்டின் கடன்கரைப்பு நிதிய உதவு தொகைகள் | | ரூ. 631,064,358.50 |
| 2. முதலீட்டின் மீதான வட்டி | | ரூ. 421,256,003.94 |
| மொத்தம் | | 1,052,320,362.44 |
| **கழிக்குக:** | | |
| 1. 1980 ஆம் ஆண்டில் கொடுப்பனவிற்காகப் பயன்படுத்தப்பட்ட தொகை | ரூ. 119,583,200.00 | |
| 2. 1980இல் திரட்டிய நிதிக்கு வரவுவைக்கப் பட்ட தொகை | ரூ. 19,005.560.55 | 138,588,760.55 |
| 1980 ஆம் ஆண்டின் தேறிய அதிகரிப்பு | | ரூ. 913,731,601.89 |

**(இ) நிருவாகக் கடன்பாடுகள்**

மத்திய வங்கிக்கூடாக அரசாங்கத்திற்கு கிடைக்கக்கூடியதாகச் செய்யப்பட்ட மூன்று கடன்கள் பொதுப்படுகடன் செலவினத்தின்கீழ் நிருவாகக் கடன் பெறுகைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவ்வகையின்கீழ் வந்த ஈரான் கடன் 1980ஆம் ஆண்டு இறுதியில முழுமையாக மீளச் செலுத்தப்பட்டது. இவ்வாண்டின் இறுதியில நிருவாகக் கடன்பாடுகளின் மொத்த ரூபாப் பொறுப்பு ரூ. 327,630,318/– ஆக விளங்கியது.

**(ஈ) திறைசேரி உண்டியல்கள்**

1976-11-26ஆம் நாளன்று தேசிய அரசுப் பேரவையின் தீர்மானத்தின் மூலம ரூ. 30,000 இலட்சங்களுக்கு அதிகரிக்கப்பட்ட அரசின் திறைசேரி உண்டியல்களின் ஒப்புதலளிக்கப்பட்ட எல்லை இவ்வாண்டில் நான்கு முறைகள் திருத்தப்பட்டன, ஒவ்வொரு திருத்தத்தின் பினபான ஒப்புதல் அளிக்கப்பட்ட எல்லை திருத்தம செய்யப்பட்ட நாட்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| திருத்தப்பட்ட நாள் | அதிகரித்த தொகை ரூ. ப. இ. | புதிய எல்லை ரூ. பத்து இலட்சத்தில் |
|---|---|---|
| 1980.03.06 | 1,000 | 4000, |
| 1980.07.10 | 2,000 | 6,000 |
| 1980.10.17 | 2,000 | 8,000 |
| 1980.12.01 | 2,000 | 10.000 |

வழங்கப்பட்ட வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் மொத்தத் தொகை இவ்வாண்டின் இறுதியில் ரூ. 98,000 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டை விட ரூ. 68,000 இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலித்தது. மத்திய வங்கி யின் பங்கான ரூ. 96,045 இலட்சத்தையும் உள்ளடக்கிவங்கித்துறை வைத்திருந்த திறைசேரி உண்டியல்களின் தொகை ரூ. 96,125 இலட்சங்களாக விளங்கியது. 1980ஆம் ஆண்டு இறுதியில் திறைசேரி உண்டியல் உடைமைகளின் பகுப்பாய்வு இணைக்கப்பட்டுள்ள அட்டவணை 2.10இல் தரப்பட்டுள்ளது. திறைசேரி உண்டியல் களின் மீதான வட்டிவீதம் இவ்வாண்டின்போது ஆண்டிற்கு 9சத வீதத்திலிருந்து 13 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

அட்டவணை 2.10

**திறைசேரி உண்டியல்களின் உடமை 1979உம் 1980உம்**

| உடமைகள் | 1979 தொகை (ப.இ.ரூ.) | 1979 சதவீதம் | 1980 தொகை (ப.இ.ரூ.) | 1980 சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. வங்கித் துறை ... | 2,706.4 | 90.2 | 9,612.5 | 98.1 |
| 1.1 மத்திய வங்கி ... | 2,656.4 | 88.5 | 9,604.5 | 98.0 |
| 1.2 வர்த்தக வங்கிகள் .. | 50.0 | 1.7 | 8.0 | 0.1 |
| 2. வங்கியல்லாத்துறை .. | 293.6 | 9.8 | 187.5 | 1.9 |
| 2.1 ஊழியர் சேமநிதி ... | 18.4 | 0.6 | 1.5 | ... |
| 2.2 ஏனைய சேமநிதிகள் ... | 3.5 | 0.1 | 6.3 | 0.1 |
| 2.3 சேமிப்பு நிறுவனங்கள் ... | 99.0 | 3.3 | — | — |
| 2.4 காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் ... | 4.0 | 0.1 | 4.0 | ... |
| 2.5 திணைக்களம், ஏனைய அலுவலக நிதிகள் ... | 168.5 | 5.6 | 175.5 | 1.8 |
| 2.6 ஏனையவை ... | 0.2 | ... | 0.2 | ... |
| 3. மொத்தம் ... | 3,000.0 | 100.0 | 9,800.0 | 100.0 |

**(உ) வரி ஒதுக்குச் சான்றிதழ்கள்**

1977ஆம் ஆண்டின்போது ரூ. 7,500 இலட்சம் ரூபாவாக அதிகரித்த வரி ஒதுக்குச் சான்றிதழ்களை வழங்குவதன்மீதான ஒப்புதலளிக்கப்பட்ட எல்லை இவ் வாண்டின்போதும் மாற்றமுறாது அதே எல்லையிலேயே இருந்தது. 1980 இறுதி வரை வழங்கப்பட்ட வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் தொகை 737,601,100 ஆக வும் இத்தொகையில் ரூ. 725,075,773 பெறுமதிகொண்ட சான்றிதழ்கள் கொடுப் பனவிற்காகவும் ஒப்படைக்கப்பட்டன. இதில் வெளிநின்ற தொகை ரூ. 12,525,327 ஆகும். 1979ஆம் ஆண்டு இறுதியில் இருந்த மட்டத்தோடு ஒப் பிடுகையில் இவ்வாண்டின்போது இது ரூ. 15,520,948 கொண்டதொரு வீழ்ச்சி யைப் பிரதிபலித்தது.

**(ஊ) மத்திய வங்கி முற்பணங்கள்**

இவ்வாண்டின்போது மத்திய வங்கியினுல் அரசிற்கு வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்கள் ரூ. 182,700,000 ஆல் அதிகரித்ததுடன் ஆண்டு முடிவில் இக்கடன்கள் வகையால் வெளிநின்ற மொத்தப் பொறுப்பு ரூ. 1,319,200,000 ஆக விளங்கியது. ரூ. 308,437,810 தொகைகொண்ட சிறப்புக் கடன்கள் அரசினுல் இவ்வாண்டில் திரட்டப்பட்டது. 1959இல் பெறப்பட்ட சிறப்புக் கடன்கள் 1978 இறுதியில் முழுதாக மீளச் செய்யப்பட்டதனுல் இக்கடன்களின் மொத்த வெளிநின்ற பொறுப்பு ரூ. 308,437,810 ஆக விளங்கியது.

## வெளிநாட்டுக் கடன்

1980ஆம் ஆண்டு முடிவில் நிர்வாகக் கடன்பாடுகள் தவிர வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் படுகடன் ரூ, 22,276,810,625ஆக விளங்கி ரூ.6,436,189,097 கொண்ட அதிகரிப்பை இவ்வாண்டின்போது பதிவுசெய்தது. வெளிநாட்டுக் கடனில் உள்ளடங்கிய செயற்றிட்டக் கடன்கள், பண்டக் கடன்கள், ஏனைய கடன்கள் முறையே ரூ. 6,784,273,556, ரூ. 11,791,107,159, ரூ. 3,701,429,910 ஆகிய தொகைகளைக் கொண்டிருந்தன. 1980இன் வெளிநாட்டுக் கடன்களின் கீழ் பெறப்பட்ட தொகை ரூ. 4,241,012,185 ஆக விளங்கியதுடன் இதில் ரூ. 125,139,436கொண்ட தொகைசீனுவின் கடன்களில் காணப்பட்ட அதிகரிப்பின் விளைவாக ஏற்பட்டதாகும். பொதுப் படுகடனின் கீழ் பெறப்பட்ட வெளிநாட்டுக்கடன்களின் பெரும்பகுதி பல்வேறு வெளிநாட்டு நாணயங்களில் இனங் குறிக்கப்பட்டதுடன் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் வெளிநின்ற வெளிநாட்டு நாணயத் தொகைகள் செலாவணி வீதங்களின் மாற்றங்களுக்கேற்ப மீளப்பெறுமதியிடப்பட்டன. 1980ஆம் ஆண்டின்போது செய்யப்பட்ட செலாவணி வீதத் திருத்தங்களின் விளைவாகப் பொறுப்புக்களில் ஏற்பட்ட தேறிய மாற்றம் வெளிநாட்டுக் கடன்பொறுப்பை ரூ 2.796,250,125ஆல் அதிகரித்தது. 1980 நிதியாண்டின்போது முப்பத்திநான்கு வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. உடன்படிக்கைகள் 1978இலும் 1979இலும் கைச்சாத்திடப்பட்டபொழுதும் பத்து வெளிநாட்டுக்கடன்களின் கீழான கொடுப்பனவுகள் தொடங்கப்படவில்லை. சிறப்பாகக் கடன்கள் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கே ஒதுக்கப்பட்டதனுல் 1980இல் வெளிநாட்டுக் கடன் பயன்பாட்டு வீதங்கள் குறைவாக இருந்தன.

**வட்டிக் கொடுப்பனவுகள்**

1980ஆம் ஆண்டில் பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 2,199,949,602ஆக விளங்கி 1979ஆம் ஆண்டிலும் பார்க்க ரூ. 566,336,042 கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலித்தது. கடன் வகை ஒவ்வொன்றின் கீழும் செலுத்தப்பட்ட வட்டி விபரங்கள் அட்டவணை 2.11இல் தரப்பட்டுள்ளன.

### அட்டவணை 2.11

### பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவு(அ)

ரூபாய்கள்

| படுகடனின் வகை | 1979 | 1980 |
|---|---|---|
| 1. உள்ளூர்க் கடன்பாடு ... | 1,276,933,248 | 1,787,420,819 |
| 1.1 ரூபாக் கடன்கள் ... | 1,028,678,106 | 1,330,288,692 |
| 1.2 நிருவாகக் கடன்பாடுகள் (ஆ) ... | 27,552,069 | 15,344,501 |
| 1.3 திறைசேரி உண்டியல்கள் ... | 220,050,000 | 441,282,750 |
| 1.4 வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 653,073 | 504,876 |
| 2. வெளிநாட்டுக் கடன்பாடு ... | 356,680,312 | 412,528,783 |
| 3. மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் ... | 1,633,613,560 | 2,199,949,602 |

மூலங்கள்: பொதுப்படுகடன் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி.

(அ) திறைசேரியினால் கொடுக்கப்பட்ட தற்காலிக ரூபாக் கடன்பாடுகள் மீதும் குறுங்கால வெளிநாட்டுக் கடன்கள் மீதுமான வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாக

(ஆ) இதில் கே. எப். டபிள்யூ. கடன், எல் 556 கடன், ஈரானியக் கடன் ஆகியனவற்றைக் கொண்டிருக்கிறது.

#### அரசுசார்பு நிறுவனங்களினால் பெறப்பட்ட கடன்பாடுகள்

#### (அ) தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்கள்

இவ்வாண்டின்போது ரூ. 5,0000.00 கொண்ட தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன் மீளச் செலுத்தப்பட்டது. வழங்கப்பட்டதும் வெளிநின்றதுமான தொகுதிக் கடன்கள் 1980ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 76,000,000 ஆக விளங்கியது. தேசிய வீடமைப்புத் தொகுதிக்கடன்களை மீட்பதற்கென நிறுவப்பட்ட கடன் கரைப்பு நிதியத்தின் ஏறத்தாழச் சந்தைப் பெறுமதி ரூ. 51,416,846 ஆக விளங்கி இவ்வாண்டின்போதுரூ. 5,746,029 அதிகரிப்பைப் பிரதிபலித்தது.

#### (ஆ) நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபைத் தொகுதிக் கடன்கள்

1980ஆம் ஆண்டின்போது ரூ. 100,000,000 கொண்ட நகர அபிவிருத்தி மேலாண்மை சபைத் தொகுதிக்கடன் வழங்கப்பட்டது. இத்தொகுதிக்கடன்கள் 3 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத்தையும் ஆண்டிற்கு 16 சதவீத வட்டியையும் கொண்டிருந்தன.

#### (இ) அரச ஈட்டு முதலீட்டு வங்கித் தொகுதிக்கடன்கள்

அரச ஈட்டு முதலீட்டு வங்கித் தொகுதிக் கடன்களில் 1980இல் எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களும் இருக்கவில்லை. 1980 இறுதியில் வழங்கப்பட்டதும் வெளிநின்றதுமான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் தொகுதிக்கடன்கள் ரூ. 47,250.000 ஆக விளங்கின.

### செலாவணிக் கட்டுப்பாடு

#### 1. செலாவணிக் கட்டுப்பாட்டு விண்ணப்பப் படிவங்களின் திருத்தம்

மீளாய்விற்குரிய காலப்பகுதியில் சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களுடன் தொடர்பான தரவுகளை தரவுக்கணிப்பில் செய்முறைப்படுத்தும் நோக்குடன் திருத்தப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டு விண்ணப்பப்படிவத்தொகுதியொன்று வழங்கப்பட்டது.

**2. வதிவற்றோரின் நிறுத்திவைக்கப்பட்ட கணக்குகள்**

வதிவற்றோரின் நிறுத்திவைக்கப்பட்ட நிதியத்தில் ஆகக் கூடியது ரூ. 100,000 கொண்ட மேலும் ஒரு விடுவிப்பிற்கான இசைவு அத்தகைய கணக்குகளை வைத்திருப்போருக்கு வழங்கப்பட்டது. நிறுத்திவைக்கப்பட்ட நிதிகள் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்து இத்தகைய முதலீடுகளின் மீதானவருவாய்கள்இவற்றுக்கான நிறுத்திவைக்கப்பட்ட கணக்குகளுக்கே திரும்ப வரவு வைக்கப்பட்ட பின்னர் அவற்றிலிருந்து வெளி அனுப்பல்கள் செய்ய ஒப்புதலளிக்கப்பட்டன. இதன் விளைவாக நிறுத்திவைக்கப்பட்ட கணக்கிலிருந்தும் வெளியனுப்பக்கூடிய உச்ச அளவு ரூ. 200,000 இற்கு உயர்த்தப்பட்டது.

**3. இலங்கையில் வதியும் இலங்கையர் அல்லாதோரின் வெளிநாட்டு நாணய கணக்குத் திட்ட அறிமுகம்**

இலங்கையில் ''வதிவதற்கான அரசின் ஒப்புதலின்'' பேரில் தற்காலிகமாகவோ நிலையாகவோ வதியும் இலங்கையர் அல்லாதோருக்கு இலங்கை வர்த்தக வங்கிகளுடன் இனங் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் கணக்குகளை வைத்திருப்பதற்குரிய வசதிகளைச் செய்து கொடுக்கும் திட்டம் 1980.05.14 ஆம் நாளில் அறிமுகம் செய்யப்பட்டது.

**4. இறக்குமதிகள்**

(i) உந்து ஈருருளி வண்டிகள் இறக்குமதி செய்யப்படும் நேரத்தில் அதாவதுமுதற் பதிவுசெய்யப்பட்டதிகதியிலிருந்தும் ஐந்து ஆண்டுகட்கும் குறைவான பழைமையாக இருந்தாலொழிய 1977இன் எண் 1 கொண்ட சிறப்பு இறக்குமதி உரிமத்தின் கீழ் குறிப்பிட்ட பீ. தீ. தொ. தலைப்புக்களில் உந்து ஈருருளிகள் இறக்குமதி செய்யப்படக்கூடாது என, 1980.07.24 ஆம் நாளன்று எண் ஈசி 29/80/ (பி) கொண்ட தொழிற்படு அறிவுறுத்தல்கள் மூலம் ஒப்புதல் பெற்ற வணிகர்கள் அறிவிக்கப்பட்டனர்.

(ii) இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான (தேயிலைப்பெட்டி, வெட்டியதாள்) கொள்கல அடித்தளம் அல்லது கொள்கலங்களைத் தயாரிப்பதற்கான தட்டையான ஒட்டுப்பலகைகளின் இறக்குமதிக்கான கொடுகடன் பத்திரத்தை நிறுவுவதற்காக இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரால் வழங்கப்பட்ட இறக்குமதி உரிமத்தைப் பெற்றுக்கொள்கின்றதன் தேவை 1980 நவெம்பர் 7ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

**5. ஏற்றுமதிகள்**

(i) கொழும்புத் துறைமுகத்தில் களஞ்சிய வர்த்தகத்தை ஊக்குவிக்கும் நோக்கில் 1977இன் எண் 1கொண்ட சிறப்பு இறக்குமதி உரிமத்தின் நிரல் IIIஇன் நியமங்களில் அத்தகைய பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தகுதியுடையவர்களிடமிருந்து மீண்டும் மீண்டும் கொடுகடன் பத்திரத்தின் அடிப்படையில் இலாபகரமான முறையில் பொருள்களை ஏற்றுமதி செய்ய விரும்புவர்களிடமிருந்தும் பொருள்கள் ஏற்றுமதிக்கான விண்ணப்பப்படிவங்களைக் கவனத்தில் கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. களஞ்சிய வர்த்தகத்தின் கீழ் மீள் ஏற்றுமதிக்காக சீத்தைப்புடவை, ஆடைகள், கராம்பு, மயக்கமருந்து, போர்க் கருவிகள், சுடுபடைக்கலங்கள் ஆகிய விடயங்களின் இறக்குமதிகள் மிகக் கடுமையாகத் தடைசெய்யப்பட்டன.

(ii) வர்த்தக அடிப்படையிலான இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டுச்செலாவணியின் பொருட்டு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், விருந்தினர்களுக்கான உள்ளூர் இரத்தினக்கல் நகை விற்பனையாளர்கள் ஆகியோருக்கு இரத்தினக்கல் நகை வர்த்தகத்திற்கு உள்ளீட்டு வழங்கல்களைக் கிடைக்கச் செய்வதற்கான ஒரு வெளிநாட்டுச் செலாவணிச் சேமிப்புத் திட்டம்.

(iii) துணை உற்பத்திகள், வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கையின் மாவரைத்தல் தொழிற்பாட்டிலிருந்தான கழிவு மூலங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி தொடர்பான வருவாய்களுக்குச் செலாவணிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படலாம் என்று 1980-11-11 ஆம் நாள் என் ஈசி 47/80 (எச்) கொண்ட தொழிற்படு அறிவுறுத்தல்களால் ஒப்புதல் பெற்ற வணிகர்கள் அறிவிக்கப்பட்டனர்.

**ஊழியர் சேமநிதியம்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை அதன் ஊழியர் சேமநிதித் திணைக்களம் மூலம் 1958 ஆம் ஆண்டின் எண் 15 கொண்ட ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் உதவு தொகைகள் மேலதிகக் கட்டணங்கள், நிதியத்தின் பணங்களை முதலீடு செய்ததிலிருந்ததான வருவாய்கள் என்பனவற்றைப் பெற்றுக் கொண்டதுடன், சட்டத்தின் 5 ஆம் பிரிவின் நியதிகளின்படி இப்பணங்களை ஒட்டிய ஏனைய தொழிற்பாடுகளையும் ஆற்றியது. 1980 ஆம் ஆண்டில் இதனுடைய தொழிற்பாடுகள் பற்றிய சுருக்கக் குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

**உதவு தொகைகள்**

1980ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் நிதியத்தினுல் பெறப்பட்ட உதவுதொகைகள் 1979ஆம் ஆண்டின் ரூ.59,75.4 இலட்சங்களுக் கெதிராக ரூ, 74,10.3 இலட்சங்களாக விளங்கின. இது முன்னைய ஆண்டுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட உதவுதொகை மட்டங்களுக்கு மேலாக ரூ. 143,4.9 இலட்சங்கள் அல்லது 24.01 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

மீளாய்விற்குரிய காலப் பகுதியில் சட்டத்தின் சிறப்பு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் தொழில் அமைச்சிற்கு உதவும் நோக்கில் ஊழியர் சேம நிதியத் திணைக்களம் அதன் வேலைகளை அதனுடன் இணைவாக மேற்கொண்டது. இத்திட்டம் முதன்மையாக, ஊழியர் சேமநிதிய உதவு தொகைகளைச் செலுத்தத் தவறும் வேலை கொள்வோரை இலங்கண்டு கொள்வதற்கும் எல்லா உதவு தொகைகளினதும் பாகுபடுத்தப்பட்ட மாதாந்த அறிக்கையை தொழில் ஆணையாளருக்கு வழங்கவும் ஏற்பாடுகளைச் செய்தது.

1980 நவெம்பரில் ஊழியர் சேமநியத்திற்கான தொழிலாளர்களின் உதவு தொகைகளை 6 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகவும் தொழில் கொள்வோரின் உதவு தொகைகளை 9 சத வீதத்திலிருந்து 12 சதவீதமாகவும் 1981 சனவரியிலிருந்து அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

**உறுப்பினர்களின் நிலுவைகள்**

1980 இறுதியில் 1980 ஆம் ஆண்டிற்கான வட்டி ஒதுக்கிற்கு முன்பு உறுப்பினர்களின் நிலுவைகள் ரூ 46203.4 இலட்சமாக அமைந்து 1979 ஆம் ஆண்டின் மட்டத்திலும் பார்க்க ரூ. 8310.6 இலட்சம் அல்லது 22.58 சத வீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 1979இல் நிலுவைகள் ரூ. 37682.8 இலட்சங்களாக இருந்தன.

**முதலீடுகள்**

மீளாய்விற்குரிய ஆண்டில் நிதியம் அரசப் பிணைகளில் ரூ, 1022.5 இலட்சங் கொண்ட தொகையை முதலீடு செய்தது. இது, 1979இன் ரூ. 7810.6 இலட்சத்திற்கு எதிராக ரூ. 1372.1 இலட்சங் கொண்ட முதிர்ச்சி பெற்ற முன்னைய பிணைகளையும் உள்ளடக்கும். எனவே தேறிய அதிகரிப்பு 1979 இன் மட்டத்திலும் பார்க்க ரூ. 1042.3 இலட்சம் அல்லது 13.34 சத வீதமாகும். நிதியத்தின் பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டின் பயன்மிகு செயற்திறனை காலத்திற்குக் காலம் ஆய்வதற்கு நாணயச்சபை ஒரு குழுவை நியமித்தது.

**முதலீடுகளிலிருந்தான வருமானம்**

1980ஆம் ஆண்டில் நிதியின் முதலீடுகளிலிருந்தான வருமானம் 1979ஆம் ஆண்டின் ரூ. 2688.3 இலட்சங்களுக்கெதிராக ரூ. 3516.1 இலட்சமாக விளங்கியது. இது முன்னைய ஆண்டின் ரூ. 627 இலட்சம் அல்லது 30.42 சதவீத அதிகரிப்பிற்கு எதிராக ரூ. 827.8 இலட்சம் அல்லது 30.79சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பு முக்கியமாக நிதியத்தினல் பெறப்பட்ட உதவு தொகைகளின் அதிகரித்த அளவான முதலீட்டாலும், இவ்வாண்டில் முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானத்தை மீள முதலீடு செய்தமையாலும் ஏற்பட்டது.

**மீளளிப்புக்கள்**

1980ஆம் ஆண்டில் உறுப்பினர்களுக்கு ஊழியர் சேம நிதியத்தில் மீளளிப்புக்கள் மூலம் வழங்கப்பட்ட மொத்தத் தொகை 1979 ஆம் ஆண்டின் ரூ. 1405.1 இலட்சத்திற்கெதிராக ரூ. 2053.6 இலட்சமாக விளங்கியது. 1979ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ரூ. 648.5 இலட்சம் அல்லது 46.15 சதவீதங் கொண்ட அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. 1980ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மீளளிப்புக்களின் எண்ணிக்கை 1979 இன் 43,066 இற்கு மாருக 50,968 ஆக விளங்கியது.

இந்தியாவிற்கு மீள குடிபெயர்ந்து செல்லும் இந்திய குடிகளின் ஊழியர் சேமநிதிய மீளளிப்புக்காகத் திணைக்களம் 1976ல் புதிய திட்டமொன்றினை அறிமுகஞ்செய்தது. இத்திட்டத்தின் கீழ் குடிபெயர்வோருக்கு அவர்களுடைய ஊழியர் சேமநிதியப் பணம் காசோலையாகச் செலுத்தப்படுவதுடன் இதனை அஞ்சல் மாற்றல்கள் மூலம் இந்தியாவிற்கு நிதியங்களை மாற்றல் செய்வதன் வாயிலாக மட்டுமே மாற்றிக் கொள்ள முடியும். இத்திட்டம் குடிபெயர்பவர்களுக்கு அவர்களுடைய ஊழியர் சேம நிதிப்பணத்தை மிகக்குறுங்காலத்தில் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்தியது.

**ஊழியர்களின் வரவிலுள்ள நிலுவைகள் மீதான வட்டி**

ஊழியர் சேம நிதியமானது ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் நிதியத்தின் பண முதலீடுகளிலிருந்தான வருமானத்திலிருந்து உறுப்பினர்களின் நிலுவைகளுக்கு வட்டிக் கொடுப்பனவினைச் செய்தல் வேண்டும். உறுப்பினர்களின் நிலுவைகளுக்கு கொடுபடற்பாலதான வட்டிவீதம் 1980ஆம் ஆண்டு இறுதியில் 8 சதவீதத்திலிருந்து 8.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் உறுப்பினர்களின் வரவில் வெளிநிற்கும் நிலுவைகளின் மீதும், அதன் பின்னர் கூட்டுமொத்தத்தின்மீதும் ஒன்றிணைந்த வட்டியும் கொடுக்கப்படுகிறது. ஆகவே வட்டியானது தொடர்வட்டி அமைப்பில் இருக்கின்றது. இதைவிட ஆண்டின் இறுதியில் உறுப்பினர் ஒருவரின் வரவில் நிற்கும் நிலுவைகளின் பேரில் அந்நிலுவைகளின் ஏதேனும் பகுதி (இது நடைமுறையாண்டின் உதவு தொகைகளைக் குறிக்கும்) உறுப்பினரின் வரவிற்கு நிதியினல் பெறப்பட்ட நாளைக் கருத்திற் கொள்ளாது முழு ஆண்டிற்கும் வட்டி கொடுக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக திசெம்பர் மாதத்தில் பெறப்பட்ட உதவுதொகைகள், முழு ஆண்டிற்கான வட்டியை அவ்வாண்டில் சனவரியில் பெறப்பட்ட உதவு தொகைகள் எவ்வாறு பெறுமோ அவ்வாறுபெறும். ஆகவே வட்டியின் உண்மையான வீதங்கள் 8 சதவீதத்திலும் பார்க்க ஓரளவு உயர்வானதாக இருக்கின்றது.

**திணைக்களத்தின் நிருவாகம்**

(அ) மீளாய்விற்குரிய ஆண்டில் திணைக்களத்தின் செயற்பாடுகள் முதன்மை வாய்ந்த மூன்று நோக்கங்களை நோக்கி மேற்கொள்ளப்பட்டன. முதலாவது 1979ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கைகளை ஆகக்குறைந்தது 1981 சனவரி இறுதிக்குள் தயாரிப்பினை இயலச் செய்வதாக இருக்கும்.

(ஆ) இக்குறிக்கோளினை நோக்கி தொழில் கொள்வோரிடமிருந்து நாளாந்தம் பெறப்படும் 'சி' படிவங்களிலுள்ள உறுப்பினர்களின் பெயர்கள், உறுப்பினர் எண்கள் ஆகியன நடைமுறை அடிப்படையில் சரிபார்க்கப்படுவதும் நடைமுறை ஒழுங்கில் செய்முறைப்படுத்துவதையும் நாளதுவரை அனைத்து வேலைகளையும் ஒழுங்குபடுத்துவதையும் திணைக்களம் செய்துவருகிறது.

(இ) 1980 ஏப்பிறலில் திணைக்களம் ஊழியர் சேம நிதியத்தை மீளாய்வு செய்வதற்கும் ஊழியர் சேமநிதிய முறையில் அனைத்தையும் உள்ளடக்கிய திருத்தங்களை மேற்கொள்ளவும் ஒரு மீளாய்வுக்கு குழு முறையை ஏற்படுத்தியது.

(ஈ) 'சி' படிவத்தின் பெயர்களையும், உறுப்பினர் எண்களையும் ஏற்கனவே அச்சிட்டு வழங்கும் முறையைப் பின்பற்றுவதற்கும் குழுகலந்துரையாடித் தீர்மானித்தது.

தற்பொழுது கிடைக்கத்தக்கதாயுள்ள தரவின்படி நிதித்தொழிற்பாடுகளின் அனைத்தையும் உள்ளடக்கிய அறிக்கை அட்டவணை 2.12இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.12

ஊ. சே. நி. புள்ளி விபரங்கள் 1979/1980

| விடயம் | 1979 | 1980 |
|---|---|---|
| 1. தொழில்களின் மொத்த எண்ணிக்கை ... | 54,823 | கி.இ. |
| 2. பெறப்பட்ட உதவு தொகைகள் (ரூ) ... | 597,542,565(அ) | 741,032,542(ஆ) |
| 3. முதலீடுகள் (ரூ) ... | 781.057,583 | 1022,500,194(இ) |
| 4. முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் (ரூ) ... | 268,830,708 | 351,608,138 |
| 5. மீளளிப்புக் கொடுப்பனவுகள் (ரூ) ... | 140,514,129 | 205,355,353 |
| 6. மீளளிப்புக்களின் எண்ணிக்கை ... | 43,066 | 50,968 |
| 7. வட்டி வீதம் (%) ... | 8.0 | 8.5 |
| 8. உறுப்பினர் நிலுவைகளின் மீதான வட்டி(ரூ) ... | 301,542,604 | 392,728,706 |

அ. தொங்கல் கணக்கில் வரவுவைக்கப்பட்ட உதவுதொகைகள் நீங்கலாக.

ஆ. தொங்கல் கணக்கில் வரவு வைக்கப்பட்ட உதவுதொகைகள் க/கு எண் 1 மாற்றலுக்கு காத்திருக்கும் உதவு தொகைகள உளளடஙகா.

இ. அரச பிணைகளில் மீள முதலீடு செய்யப்பட்ட முதிர்ச்சியடைந்த நிதிகள் உள்ளடங்க.

## புள்ளிவிபரவியல்

புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுச் சேகரிப்பு, பகுப்பு, வெளியீடு என்பன 1980 இலும் தொடர்ந்தது. நுகர்வோர் நிதி அளவீட்டுத் தரவுகளின் கணிப்பு செய்முறைகள் நிறைவு செய்ய முடியாததினுல் 1980இல் இவ்வறிக்கையை வெளியிட முடியவில்லை. ஆனுல் முக்கிய தரவுகளைக்கொண்ட தொடக்க அறிக்கை 1981 தொடக்கப் பகுதியில் வெளியிடப்படும். நாடு முழுவதையும் கொண்ட தரவுச் சேகரிப்பு முறை 1980 இலும் தொடர்ந்ததுடன் புதிய வெளியீடான விலைகளும் கூலி புள்ளிவிபரவியலும் வெளியிடப்பட்டது. திணைக்களமும் தனது வழமையான வெளியீடுகளை வெளியிட்டது.

தரவுச் சேகரிப்பு பகுப்பு வெளியீடுகளுடன் தொடர்பான நடவடிக்கைகளின் சில செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

### நுகர்வோர் நிதியும் சமூக பொருளாதார அளவீடும் 1978/1979

நான்கு சுற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட தரவுகள் தொகுக்கப்பட்டு காந்த நாடாக்களில் பதிவு செய்யப்பட்டன. புள்ளிவிபர அட்டவணைகளின் தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டது. கணனித்தரவுச் செய்முறைகள் நிறைவு பெறாததன் காரணமாக குறிப்பிட்ட நாளான 1980 ஒற்ரோபரில் அறிக்கையை வெளியிட இயலாமல் போயிற்று. வருமானம், தொழில்வாய்ப்பு ஆகியவற்றின் ஆய்வு முடிவுகளை உள்ளடக்கிய தொடக்க அறிக்கை 1981 தொடக்கத்திலும் இறுதி அறிக்கை 1981 இறுதியிலும் வெளியிடப்படும்

### குருநாகல் மாவட்ட உலக வங்கி கிராம அபிவிருத்தி செயற்றிட்டம் மட்டக்குறி அளவீடு

நுகர்வோர் நிதி சமூக பொருளாதார அளவீடு 1978/79 உடன் இணைந்த இவ்வளவீட்டின் தரவுகள் நுகர்வோர் நிதி அளவீடு 1978/79 உடன் சேர்ந்து செய்முறைப்படுத்தப்பட்டதெனினும் நிறைவு பெறவில்லை.

### நாடு முழுவதற்குமான தரவு சேகரிப்பு முறை

1978இல் புகுத்தப்பட்ட நாடுதழுவிய தரவுச்சேகரிப்பு முறை 1980இலும் தொடர்ந்தது. இந்நிகழ்ச்சித் திட்டமானது ஏறக்குறைய 220 நுகர்வோர் விடயங்களின் சில்லறை விலைகள், முதன்மை வேளாண்மை உற்பத்திகளின் உற்பத்தியாளர் விலைகள் நெற்செய்கையில் கூலி வீதங்கள், தேயிலை இறப்பர் தெங்கின் சிறுஉடைமைகள்,கட்டடவாக்கக்கைத்தொழில்,நெற்செய்கை,தேயிலை, இறப்பர் தெங்குப்பெருந்தோட்டங்களுக்கான உள்ளீடுகளின் சில்லறை விலைகள் ஆகியவற்றின் மீதான தரவுகளைச் சேகரித்தது. நுகர்வுப் பொருட்கள், வேளாண்மை உள்ளீடுகள், கூலி என்பனவற்றின் கிடைப்பனவை ஒட்டியும் விபரங்கள் சேகரிக்கப்பட்டன. இத்தரவுகள் நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 நகர மத்திய நிலையங்களிலிருந்து ஒழுங்கான அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள்'விலைகள் கூலிகள் புள்ளிவிபரவியல்' சில்லறை விலைகளின் உற்பத்தியாளர் உள்ளீட்டு விலைகள் கூலிகள் ஆகியவற்றின் அண்மைய போக்குகள் என்ற வெளியீட்டில் காட்டப்பட்டது.

### நுகர்வுமாதிரிகளினதும் செலவினதும் அளவீடு

1979, 1980 ஆம் ஆண்டுகளில் பெப்புருவரி, மாச்சு, ஏப்பிறல் மாத காலப் பகுதிக்கான நாடுதழுவிய அடிப்படையில் கிராமத்துறையில் நடத்தப்பெற்ற நுகர்வு மாதிரிகளும் செலவினதும் அளவீடுபற்றிய அறிக்கை திட்டம் செயற்படுத்தல் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

### திட்டமிடப்பட்ட முதலீடுகளின் அளவீடு

தனியார்துறையின் திட்டமிடப்பட்ட முதலீடுகளின் அளவீடு 1980 யூலையில் இருந்து அஞ்சல் விசாரணைகள் மூலம் நடாத்தப்பட்டது. மாதிரிக்கெடுத்துக் கொள்ளப்பட்டவற்றில் கவனஞ்செலுத்திய வீதம் ஏறத்தாழ 45 சதவீதமாக இருந்ததுடன், செய்தி சேகரிக்கப்பட்டதன் அடிப்படையில் தனியார் நிறுவனங்களினால் திட்டமிடப்பட்ட முதலீடுகளின் தேர்வுமுறையான மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டன.

**தாராளமாக்கப்பட்ட இறக்குமதி நிகழ்ச்சித் திட்டத்தின் நுணுக்க ஆய்வு பற்றிய அளவீடு**

திணைக்களம் இறக்குமதி ஏற்றுமதிகள் மீது திறக்கப்பட்ட கொடுகடன் சான்றிதழ்கள், கொடுகடன் பத்திரங்களின் மாற்றம், கொடுகடன் பத்திரங்களுக்கு எதிராகப் பெறப்பட்ட உண்டியல்கள் ஆகியவற்றின் மீதான மாதாந்தத் தரவுகளைப் பெற்று தாராளமாக்கப்பட்ட இறக்குமதி நிகழ்ச்சித் திட்டத்தின்மீது நுணுக்கமான ஆய்வைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. தரவுகள் 1978ஆம் ஆண்டறிக்கையில் பக்கம் 120 இல் காட்டப்பட்டவாறு பட்டியற்படுத்தப்பட்டதுடன் மேலும் நுகர்வோர், இடைநிலை, முதலீட்டுப் பொருட்கள் எனப்பாகுபடுத்தப்பட்டது. இத்தரவுகள் பல்வேறு உரிய அமைச்சுகளுக்கு ஒழுங்கான அடிப்படையில் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்பட்டது.

**உலக வங்கி ஆராய்ச்சிச் செயற்றிட்டம் — நீண்டகால பயிர்களான தேயிலை, இறப்பர் என்பவற்றின் கணிதப் பொருளியல் மாதிரிகளை உருவாக்குதல்**

இறப்பர் பயிர்ச்செய்கை தொடர்பான வரலாற்றுத் தரவுகள் 50 பெருந்தோட்டங்களிலிருந்து திரட்டப்பட்டன. தரவுகளைச் சேகரிக்கும் பொறுப்பு அந்தந்த பெருந்தோட்டங்களின் மேற்பார்வையாளர்களிடம் ம.தோ.அ. சபை இ.அ.பெ கூட்டுத்தாபனம் என்பவற்றின் தலைமை அலுவலகங்கள் மூலமாக பொறுப்பளிக்கப்பட்டது. இத்தரவுகள் இத்திணைக்களத்தின் மூலம் பதிப்பிக்கப்பட்டு தரவுக் கணக்கீட்டு நாடாக்கள் மூலம் உலக வங்கிக்கு அனுப்பிவைக்கப்படும்.

**தனியார் முதலீட்டு அளவீடு**

இவ்வளவீட்டின் தரவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டபோதும் இது 1978-79 நுகர்வோர் நிதியும் சமூக பொருளாதார அளவீட்டின் தரவுகளை ஒழுங்குபடுத்துவதற்கு முதன்மை நிலை கொடுக்கப்பட்டமையால் தடைப்பட்டது.

**1975/76 வேளாண்மைக் கடன்களினது உள்நாட்டுப் படுகடனினதும் மீளக் கொடுப்பனவினதும் அளவீடு**

இவ்வளவீட்டினது மாதிரி அறிக்கை முற்றுப் பெற்றுள்ளது.

**புள்ளி விபர வெளியீடுகள்**

1980ஆம் ஆண்டு காலத்தில் கீழ் குறிப்பிட்ட வெளியீடுகள் வெளியிடப்பட்டன :

1. சமூக பொருளாதார ஏடு—1980
2. இலங்கையின் பொருளாதார சமூக புள்ளிவிபரவியல் மலர் — 2 இதழ்கள் 1உம் 2உம்
3. விலைகள் கூலிகள் புள்ளிவிபரங்கள் மலர் 1 இதழ் 2

**பணியாளரகம்**

பணியாளரகத் திணைக்களம் தொடர்ந்தும் பணியாளர்களைத் தெரிவு செய்தல், பதவி உயர்வுகள் தொழிற் செயற்பாடுகளை அளவிடுதல் ஒழுங்கு நடவடிக்கைகளும் பணியாளர் தொடர்பான விடயங்கள், எல்லா விடயங்களையும் தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தது.

**பணியாளர்களைச் சேர்த்தல்**

1979 ஒற்ரோபர் தொடக்கம் உயர்பதவியாளர் வகுப்பு தொழில் நுட்ப தரம் என்பன தவிர்ந்த ஏனைய எல்லா வகை தொழில்கட்குரிய பணியாளர்கள் அனைவரும் தொழில் வங்கி மூலம் அனுப்பப்பட்டவர்களில் சேர்க்கப்பட்டனர்.

**பணியாளர் பட்டியல்**

வங்கியில் உள்ள எல்லா உயர்பதவியாளர்கள் தொடர்பான ஒரு முழு பணியாளர் பட்டியல் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது கிடைக்கத்தக்கதாயுள்ள மனிதவலுவினையும் எதிர்காலத்தில் தேவைப் படக்கூடிய மனித வலுவினையும் பற்றிய புள்ளி விபரங்களையும் அதனையொட்டிய ஏனைய தரவுகளை தயார் செய்ய வசதி செய்வதன் பொருட்டும் ஆகும். வங்கியில் உள்ள ஏனைய ஊழியர்களையும் இதனுள் உள்ளடக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

**மீளவமைத்தல்**

(அ) மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களை மாத்தறையிலும் அனுராதபுரத்திலும் ஏற்படுத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) பின்வரும் கடமைகளையும்தொழிற்பாடுகளையும் செய்வதற்காக தகவல் திணைக்களம் எனும் புதிய பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

(i) மிகவும் சிறந்ததும், நாளதுவரையினதுமான ஒரு நூல் நிலைய பணியை தொழிற்படுத்தலும் பேணுதலும்.

(ii) வெவ்வேறு வெளியீடுகளிலும் நூல்களிலும் நாளேடுகளிலும் இருந்து செய்திகளைச் சேகரித்து அத்தகைய செய்திகளை வங்கியில் நாட்டமுடையோரிடையே வழங்குதலுமாகும்.

(iii) வங்கி வெளியீடுகளை விற்பனை செய்தலும் பங்கிடுதலும்.

(iv) செய்திகளை நாளேடுகட்கும் பொது மக்களுக்கும் வெளியிடுதலும் வழங்குதலும்.

(v) காலத்துக்குக் காலம் மத்திய வங்கியினால் நடாத்தப்படும் மாநாடு, கருத்தரங்கு வேலைக்களம் ஆகியவற்றுக்கான ஒழுங்குகளைச் செய்தல்.

(vi) செயலகத் திணைக்களத்தில் வரவேற்புப் பிரிவினால் இதுவரை நடாத்தப்பட்ட வேலைகள்.

(vii) மேலும் காலத்துக்குக் காலம் கொடுக்கப்படும் ஏனைய தொழிற்பாடுகள்.

### பயிற்சி

பயிற்சிப் பிரிவு தொடர்ந்தும் வங்கி அலுவலர்களைப் பயிற்றுவித்தற்கான செயற் திட்டங்களை உருவாக்கியும் தொழில் நடைமுறைப் படுத்தல் தொடர்பான வேலைகளையும் மேற்கொண்டு வந்தது. பட்டப்பின் பயிற்சி தவிர வங்கி அலுவலர்கட்கு குறுங்கால பயிற்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டன. இந்த அலுவலகத்திஞல் உள்ளூர் வங்கி அலுவலர்கட்கு பின்வரும் பயிற்சிச் செயற் றிட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன,

### 1980ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சிச் செயற்றிட்டங்கள்

1. 1980 மே 5இல் இர்விங் ரஸ்ட் வங்கி, நியூயோக் மூலம் நடாத்தப் பட்ட "இறக்குமதி - ஏற்றுமதி / வங்கியாளர் நிதியீட்டலை ஏற்றல்" எனும் கருத்தரங்கு.
2. 1980 ஒக்ரோபர் மாதத்தில் "சிறு வேளாண்மையாளர் கொடுகடன் முகாமைத்துவம்" மீதான பயிற்சிச் செயற்றிட்டம் ஒன்று வர்த்தக வங்கி, மத்திய வங்கி அலுவலர்கட்காக இந்திய ஒதுக்கு வங்கியின் வேளாண்மைத்துறை வங்கியியல் கல்லூரியிஞல் கொழும்பு 7, விஜய ராம மாவத்தையிலுள்ள வேளாண்மை ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத் தில் நடாத்தப்பட்டது.

### ஆளணி

1980ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் ஆளுநர் முனைவர் டபிள்யூ. இராசபுத்ரம் பின்வரும் மாநாடுகளிலும், கூட்டங்களிலும், கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டார்:—

(அ) சிங்கப்பூரில் (சனவரி 16 தொடக்கம் - 19வரை) நடைபெற்ற தென் கிழக்காசிய மத்திய வங்கிகளது (தெகிஆம) ஆளுநர்களின் பதிஞறுவது ஆண்டுக்கூட்டம்;

(ஆ) பர்மாவின் இரங்கூனில் (பெப்புருவரி 4 தொடக்கம் - 5 வரை) நடை பெற்ற ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர்கள் சபையின் எட்டாவது ஆண்டுக் கூட்டம்;

(இ) பன்ஞட்டு நாணய நிதியத்தின் இடைக்கால குழுக்கூட்டம் (பநாநி) பநாநியின் அபிவிருத்திக்குழுக்கூட்டம் உலகவங்கியினதும், சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசிலுள்ள ஹம்பர்க்கில் நடைபெற்ற "24ம் குழுக்கூட்டம்", பிரசல்ஸ், இலண்டன் ஆகிய இடங்களில் நடைபெற்ற அலுவல்சார் கலந்துரையாடல்கள் (ஏப்பிறல் 19 தொடக்கம் - மே 2 வரை);

(ஈ) கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவால் (யூன் 21 - தொடக்கம் யூலை 12 வரை) இலண்டன், பேர்மிங்காம், மியூனிச், ஹம்பர்க் ஆகிய இடங்களில் முதலீட்டு ஊக்குவிப்புத் தொடர்பாக நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள்;

(உ) கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவால் நியூயோர்க்கில் நடாத்தப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்புக் கருத்தரங்கு, வாசிங்டனில் நடைபெற்ற பன்ஞட்டு நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் கூட்டங்கள் (செத்தெம்பர் 11 தொடக்கம் - ஒற்ரோபர் 3 வரை)

(ஊ) இந்தோனேசியாவிலுள்ள யகார்த்தாவில் (நவெம்பர் 20 தொடக்கம் - 24 வரை) நடைபெற்ற தென்கிழக்காசிய, நியூசிலாந்து, அவுத்திரேலியா ஆகிய நாடுகளின் மத்தியவங்கி ஆளுநர் சபையின் பதின்மூன்ருவது கூட்டம்.

நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் முனைவர் டபிள்யூ. எம். திலகரத்ன நாணயச் சபையில் அலுவல்சார் உறுப்பினராகத் தொடர்ந்தும் கடமையாற்றினுர்.

நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் முனைவர் திலகரத்ன இல்லாத வேளைகளில் திறைசேரியின் துணைச் செயலாளர் திரு. சீ. பீ. சண்முகம் நாணயச் சபையின் அலுவல்சார் உறுப்பினராக கடமையாற்றினுர்.

துணை ஆளுநர் முனைவர் காமனி கொரியா செனிவாவிலுள்ள வர்த்தகம், அபிவிருத்திக்கான பன்ஞட்டு அமைப்பின் செயலாளர் நாயகமாகத் தொடர்ந்தும் 1980 நவெம்பர் 4ம் நாள் வரை விடுவிப்பில் கடமையாற்றினுர். அவர் 1980 நவெம்பர் 4 ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்தும் ஓய்வு பெற்ருர்.

துணை ஆளுநரான திரு. ஈ. எராமுதுகொல்ல 1980 மாச்சு 31 வரை பன்ஞட்டு நாணய நிதியத்தில் பதில்நிறைவேற்று பணிப்பாளராக கடமையாற்றி 1980யூலை 16 தொடக்கம் வங்கிப்பணியிலிருந்து ஓய்வுபெற்ருர்.

மூத்த துணை ஆளுநர் முனைவர் எச். என். எஸ். கருணுதிலக்க, ஆளுநர் நாட்டில் இல்லாது வெளிநாட்டில் இருந்த வேளைகளில், நாணயவிதிச்சட்டத்தின் பிரிவு 24 இன் நியதிகளின்படி வங்கியின் நிறைவேற்று அலுவலராகக் கடமை யாற்றினுர்.

ஆளுநரின் உதவியாளர் திரு. டீ. எல். கன்னங்கர, 1980 யூலை 1 தொடக்கம் பன்ஞட்டு நாணய நிதியத்தில் பதில்நிறைவேற்றுப்பணிப்பாளராகக் கடமை யாற்றினுர்.

மதியுரையாளர், திரு. டி. ஜீ. புஞ்சிஅப்புகாமி, 1980 மாச்சு 21 தொடக்கம் ஆளு நரின் உதவியாளராகவும், 1980 யூலை தொடக்கம் நாணயச்சபையின் செயலாள ராகவும் நியமிக்கப்பட்டார்.

பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர், திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன, 1980 யூலை 1ம் நாள் தொடக்கம் ஆளுநரின் உதவியாளராக நியமிக்கப்பட்டார்.

முதன்மைக் கணக்காளர் திரு. வெ. சி. சுப்பிரமணியம், 1980 பெப்புருவரி 11ஆம் நாள் தொடக்கம் சொலமன் தீவுகளின் நாணய மேலாண்மைச்சபைக்கு மதியுரையாளராகக் கடமையை ஏற்பதற்கு பன்ஞட்டு நாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்டார்.

ஊழியர் சேம நிதியத்தின் கண்காணிப்பாளர் திரு. எஸ். டபிள்யூ. பீ. அமரசூரிய 1980 ஏப்பிறல் 5 ஆம் நாள் தொடக்கம் விடுப்பில் சென்ருர். திரு. வீ. என். டீ. நாணயக்கார 1980 ஏப்பிறல் 7ஆம் நாள் தொடக்கம் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

முனைவர் எஸ். டி. ஜீ. பர்ஞந்து கிராமக் கொடுகடன் அபிவிருத்தி நிதியிடல் பணிப்பாளர் பதவியுடன் 1980 ஓகத்து 1ம் நாள் தொடக்கம் பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

பதில் மேலதிக முதன்மைக் கணக்காளர் திரு. எச். பிரேமரத்ன, கம்பியா நாட்டின் மத்திய வங்கியில் நிதி நிறுவனங்களின் மேற்பார்வையாளர் கடமையாற்றுவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்டார்.

வங்கி மேற்பார்வைப்பணிப்பாளர், திரு. யூ. ஏ. டீ. சில்வா, 1980 பெப்புருவரி 18ஆம் நாள் தொடக்கம் முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

பதில் மேலதிக முதன்மைக் கணக்காளர் திரு. ஏ. டி. டபிள்யூ. ஜெகோரத்னம் 1980 பெப்புருவரி 1ஆம் நாள் தொடக்கம் பதில் செலாவணிக்கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

செல்வி. ஏ. எம். சீ. சில்வா 1980 ஒகத்து 1ஆம் நாள் தொடக்கம் செய்தித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

மீளாய்விற்குரிய ஆண்டில் மத்தியவங்கியின் பின்வரும் அலுவலர்கள் அரசு / அல்லது அரச நிறுவனங்கட்கு தொடர்ந்தும் பகுதிநேர கடமைக்கு விடுவிக்கப் பட்டார்கள்:-

ஆளுநரின் உதவியாளர் திரு. டி. ஜீ. புஞ்சிஅப்புகாமி அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவராக,

பொதுப்படுகடன் கண்காணிப்பாளர் திரு. சி. இராசலிங்கம் திறைசேரியின் நாணயக்கொள்கைப் பணிப்பாளராக நிதி, திட்டமிடல் அமைச்சிற்கு,

பொருளாதார ஆராய்ச்சி மேலதிகப்பணிப்பாளர், திரு. எஸ். ஈஸ்பரதாசன் திறைசேரியின் இறைக் கொள்கைப் பணிப்பாளராக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு,

பொருளாதார ஆராய்ச்சித் துணைப்பணிப்பாளர், முனைவர் எல். ஈ. என். பர்ணுந்து திறைசேரியின் பொருளாதார அலுவல்கள் மேலதிகப் பணிப்பாளராக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு,

பொருளாதார ஆராய்சித் துணைப்பணிப்பாளர் முனைவர் பி. ஏ. எஸ். தகநாயக்க 1980 ஒகத்து 31 வரை தேசிய விலைகள் ஆணைக்குழுவின் செயலாளர் நாயகமாக வர்த்தக கப்பற் துறை அமைச்சிற்கு,

மீளாய்விற்குட்பட்ட ஆண்டில் மத்திய வங்கியின் பின்வரும் அலுவலர்கள் அரசிற்கு அல்லது அரச நிறுவனங்கட்கு தொடர்ந்தும் முழுநேர விடுவிப்பிலிருந்தனர்:-

திரு. வீ. கே. விக்ரமசிங்க தேசிய அபிவிருத்தி வங்கியின் பொதுமுகாமையாளராக.

முனைவர் ஜீ. டபிள்யூ. பீ. விக்ரமசிங்க இலங்கை ஏற்றுமதிக்கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் முகாமைப்பணிப்பாளராகவும்.

திரு. ஏ. ஏ. டீ. ஜஸ்டின் இலங்கை டயர் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சின் செயலாளராகவும்.

திரு. பி. எம். அசன் உணவு ஆணையாளராக

திருவாளர்கள் ஜீ. எம். பீ. டி சில்வா, டீ. ஜே. எம். மீகொட, ஏ. ஏ. ஆர். திசாநாயக தேசிய அபிவிருத்தி வங்கிக்கு.

திருவாளர்கள் கே. ஜி. தர்மசேனவும் சி. ஈ. ஜயசூரியவும் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு.

திரு. எம். பி. திசநாயக்க, முனைவர் ஏ. சி. றந்தெனி, திரு. ஜீ.வீ.ஏ.பொன்சேக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

திரு. டபிள்யூ. எல். டி. சில்வா *1980* யூன் *21*ஆம் நாள் வரை ''மாக்பெட்'' பொது முகாமையாளராக உணவு கூட்டுறவு அமைச்சிற்கு,

இத்துடன், பல மத்திய வங்கி அலுவலர்கள், பொதுக்கூட்டுத்தாபனங்களின் சபைகளிலும், அலுவல்சார் குழுக்களிலும் அரச நிறுவனங்களிலும் கடமை யாற்றினர்.